மீண்ட இன்பம்

நாவல்

ராம. நாக. முத்தையா

தமிழக நிலையம்
சண்முகநாதபுரம் — காரைக்குடி (வழி)

முதற்பதிப்பு: டிசம்பர் 1947
வெளியீடு க.

விலை ரூ. 1-8-0.

அச்சேற்றியவர்கள்: செந்தமிழ்ப் பதிப்பகத்தார்
வெளியிடுவோர்: தமிழகம், ராஜேந்திரபுரம்.

முன்னுரை

"வாழ்வாவது இன்பம்; வளமுறுவது திண்ணம்" என்பது எங்களின் அசைக்க முடியாத நம்பிக்கை." இவ்வாசகமே அன்பர் நாக. முத்தையா அவர்கள் புனைகதையின் இறுதி வாசகம். அவர் வாழ்க்கைக் குறிக்கோளை அது நன்கு குறிப்பிடுகின்றது. இன்றையத் தமிழர் வாழ்க்கையில் எழும் பிரச்னைகள் யாவும் ஆசிரியரால் கதை நிகழ்ச்சிகளின் ஊடாகவே நன்கு காட்டப்படுகின்றன. தற்காலத் தமிழ் இளைஞர் உலகிற்கு இது ஒரு இன்ப நூலாகவும், அற நூலாகவும், வீர நூலாகவும் விளங்க வல்லது. ஆசிரியர் உணர்ச்சிகள் ஓரிடத்து, ஆழ் நிலங் கிழித்துச் செல்லும் தலைக் காவிரியாகவும், ஓரிடத்துக் கலக்கியடித்தோடும் அமராவதி ஆறு போன்ற காட்டாறாகவும், மற்றும் ஓரிடம் பரந்தகன்ற தடங்கரைக் காவிரியாகவும் சென்று கதையின் பகுதிகளான வாழ்க்கைச் செய்திகளைத் தந்து வளந் தருகின்றன.

ஆசிரியர் பள்ளியில் பயிலுங்கால், அவர் கல்வி ஆசிரியனாய் இருந்த எனக்கு, அக் கல்வி முறையிலேயே இதுவரை இருந்துவந்த அவநம்பிக்கை இந்நூலால் ஓரளவு அகல இடமுண்டு. இவ்

ஐயக் குறைபட்ட பிறமொழிக் கல்வியே இத்தனை பலன் தருமானால், நிறைகல்வி என்னா தாராது!

இளைஞராகிய மாணவர் இளைஞர் உலக அநுபவங்களைக் கலை உருவில் தந்திருக்கிறார். அவ்விளைமை குறித்து இன்னும் உயரிய வாழ்வியல் அநுபவச் சித்திரங்களையும் கலை ஓவியங்களையும், அவர் தருவார் என்று நம்புகின்றேன். அவர் முயற்சியின் கனியை நுகர்வதின் மூலமே, தமிழ் நாட்டார் அவரை ஊக்குவது மட்டுமன்றித் தம்மையும் மேம்படுத்திக் கொள்வர். ஆசிரியர் போன்று மற்ற மாணவர்களும் தத்தம் பலதிறப்பட்ட அநுபவங்களைக் கலைவடிவில் வெளியிடின் இலக்கியம் பெரிதும் வளமடையும் என்பது உறுதி.

சென்னை,
1—10—47.

கா. அப்பாத்துரை.

மீண்ட இன்பம்

முருகன்

"அப்பப்பா என்ன இடி! செடிகள் ஒருபுறம் தலைசாய்கின்றன. கொடிகள் மற்றொருபுறம் ஆடுகின்றன! இந்த மழைத் துளியிலே மின்னல் வேறு! இவையெல்லாம் எவற்றின் அறிகுறியோ? ஒருவேளை வளமுடன் வாழ்ந்த நாங்கள் இன்று வகையிலாது இருத்தல் கண்டு எங்களை அவை எள்ளி நகையாடுதலின் ஒலியாக இருக்கலாமோ? இன்னும் இடியும் மின்னலும் இந்த நிலையில் இருக்குமாயின் நாங்கள் அடிகெட்டு மடிய வேண்டியதுதான்!

"மனிதர்களாகப் பிறந்தோமே அதுதான் நாங்கள் செய்த பெரும் பிழை! மனிதர்களாகப் பிறந்து உயிர்வாழ நினைந்து நாளெல்லாம் நலிந்து நாங்கள் படாதபாடு பட்டுக்கொண்டு இருக்கின்றோம். இந்நிலையில் எங்கள் வாழ்வுத்தேர் உருளுதற்கு இடிவேறு தடை செய்தால், நாங்கள் யாது செய்வோம்? இயற்கையை இரக்கமற்றவள் என்று வைவதா அன்றி வாழ்த்துவதா? 'அரிதரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்று பாடியவர் யாராயிருப்பினுஞ் சரி, உண்மையிலேயே மனிதப் பிறவியின் மாண்பினையும் பண்பினையும் அறியாதவனாகத் தான் இருக்க வேண்டும். அறிந்திருந்தால் அவன் இங்ஙனம் மறந்து கூடப் பாடி இருக்கமாட்டான்!

இவ்வுலகத்தில் மனிதனாகப் பிறந்தவன் மகிழ்ச்சியுடன் வாழ்வதே இல்லை என்று ஒருவாறு துணிந்து கூறலாம். மேலும் அவன் வரட்சியின் வடிவே தோன்றி விட்டான் என்றால் இன்பம் என்பது என்ன வென்று தெரியாத நிலையிலேதான் இருப்பான். ஒரு நிமிடங்கூட அவனால் நிம்மதியாக வாழ இயலாது. அவனைக் கவலைக் கற்கள் மோதி மோதிச் சாகடித்துவிடும். எத்தனை ஏழைகள் தொடர்ந்து வருகின்ற துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள மாட்டாமல், தாங்களாகவே தங்களது உயிரைப் போக்கிக் கொண்டிருக்கின்றார்கள்? சுருங்கச் சொல்லின் ஏழைகளின் உள்ளம் துன்பத்தின் பீடம் என்று சொல்லலாம்.

ஏதேதோ நான் வேதாந்தம் பேசுவதாக எண்ண வேண்டாம். நானும் ஓர் ஏழை என்ற காரணத்தால், நான் என்வாழ்வில் அனுபவித்தவற்றைத்தான் சொல்லுகிறேன். நாங்கள் இருவர் இப்போது எங்கள் வீட்டிலே இருக்கின்றோம்; நானும் என் அன்னையும். என் தந்தை உயிருடன்தான் இருக்கின்றார். என்றாலும் எங்களுடன் ஒட்டாத முறையிலே வாழ்கின்றார். அவர் திரைகடல் ஓடித் திரவியந்தேடச் சென்றாருள் ஒருவர். பத்து ஆண்டுகட்கு முன்னர், அவர் எங்களைப் பிரிந்து சென்றார். அவர் சென்றார், அவருடன் எங்கள் வளமுள்ள வாழ்வும் சென்றது. எங்கள் வரலாற்று ஏட்டிலே வரட்சிநிலையும் வரையப்படவேண்டிய நிலைக்கு நாங்கள் வந்துவிட்டோம்.

என் அன்னைக்கு இப்போது ஐம்பது ஆண்டுகள். தள்ளாத வயது. தெளிவாகக் கூறவேண்டும் என்னின் 'கோற் கண்ணள் ஆனால் குனிந்து' என்று சொல்லலாம்.

தந்தை தந்துசென்ற குவியலும், தாய் சேர்த்துவைத் திருந்த புதையலும் அவியலான இந்தமோசத்திலே நாங் கள் அன்றாடம் உழைத்து உண்ண வேண்டிய பிராணி கள். ஒருநாள் உழைத்திலமேல் அன்றெல்லாம் பிழைத் திரோம் என்பது திண்ணம்.

எங்கள் நிலையை வெளியே சொன்னால் 'விதி' என்று சொல்லிவிட்டு வாளா இருந்து விடும் பெருமக்கள், நாங் கள் திருடிப் பிழைக்கத் துவங்கிவிட்டால் அதனையும் 'விதி' என்று சொல்லி விட்டுவிடமாட்டார்கள்; விலங்குகளுடன் தோன்றி விழுங்கிவிடுவார்கள்! ஏழை அழியவே பிறந் திருக்கின்றான். எனையோர் வாழவே பிறந்திருக்கின்றனர் என்ற எண்ணம் வேரூன்றி வீறுபெற்று விளங்குகின்ற நிலத்திலே நாங்களும் பிறந்தோமே, அதனால்தான் இத துணை துன்பங்களையும் அநுபவிக்கின்றோம். இதனை 'விதி யின் விளையாட்டு' என்று சாஸ்திரிகள் சொல்லுவார்கள்!

எங்கள் ஊர் காட்டூர் என்பது. அதன் அருகிலே திருநகர் என்றொரு பெருநகர் இருக்கின்றது. அந்நகரில் எங்களுக்கு ஒரு கடை உண்டு. அந்தக் கடையினால் தான் எங்கள் வாழ்வு கடைத்தேற வேண்டும். அந்தக் கடை யில் ஏவுகின்றவனும், ஏவிய வேலையை ஏற்று ஒழுகுகின் றவனும் நான்தான்! காலையில் எழுந்தவுடன் கடைக்குப் போகலாம் என எழுந்தால் இடித்துத் தள்ளுகின்ற மேகம் எங்களுக்கு இடைஞ்சல் செய்கின்றது. கெட்ட குடியே கெடுகின்ற நிலை ஏற்படுகின்ற போழ்தும், பட்டகாலி லேயே மீண்டும் மீண்டும் படுகின்ற பொழ்தும், நாங்கள் இறைவனை சிந்திக்காது என்செய்ய முடியும்? இறைவன் இருக்கின்றானா இல்லையா என்ற ஆராய்ச்சி அப்போது

தான் எங்கள் உள்ளங்களிலே இடம் பெறுகின்றது! இறைவனே உனக்குக் கண்ணில்லையா? காது இல்லையா? அல்லது எங்கள் நிலையை உன் கண்கள் காணும் இயல் பற்றனவா? எங்கள் துயரத்தால் நாங்கள் எழுப்புகின்ற பேரொலியை உன் காதுகள் கேட்கும் பண்பற்றனவா? என்ற அவல மொழிகள் எல்லாம் அப்போதுதான் எங்களை அறியாமலேயே எங்கள் வாய்களினின்றும் வெளி வருகின்றன!

காலையில் எழுந்தவுடன், இடிக்குப் பயந்து சும்மா இருந்துவிடின் நம்பாடு இடர்ப்பாடாகப் போய்விடுமே என்றெண்ணிக் கொண்டே, கடைக்குப் போகச் சித்தமானேன். இருந்த கஞ்சியைக் குடித்து விட்டு, முதிர்ந்த என் தாயிடம் சொல்லிக் கொண்டு நான் திருநகர் நோக்கிச் சென்றேன். திருநகர் சென்று கடையைத் திறந்தவுடன் தான் ஞாயிறு விடுமுறை நாளல்லவா என்ற நினைப்பு எனக்கு வந்தது. வந்தது குறித்து வருந்தாமல், கடையை இறுகப் பூட்டிவிட்டு, வந்தவழி மீண்டேன்.

இதுகாறும் குமுறிக் கொண்டிருந்த வானம் இப்போது கொட்டத் துவங்கி விட்டது. மழைக்கு ஒதுங்கி நிற்கவோ மனமில்லை. தாய் தனித்து இருக்க நேரிடுமே என்ற எண்ணம் என்னை இன்னுஞ் சிறிது விரைந்து நடக்கத் தூண்டியது. வீட்டில் என் தாய்க்குத் துணையாக வேலையாள் ஒருவன் இருந்தான் என்றால் நான் மழைக்கு ஒதுங்கி நிற்பதிலே பொருள் உண்டு. வீட்டிலோ வேலையாள் எவனும் இல்லை. நான்தான் என் வீட்டின் முதலாளியும் தொழிலாளியும்! வீட்டை விரைவாக எய்தி

விடவேண்டும் என்ற விழைவினால் தூண்டப்பட்ட நான் விரைவாக நடந்துகொண்டிருந்தேன்.

மழை வழுக்க வழுக்க, கால்களை இழுத்து இழுத்து வைத்தேன். நல்லமழையில் நடப்பது கடினமல்லவா? பிறந்த ஊருக்கும் பிழைப்புநடத்துகின்ற ஊருக்கும் இடையிலே இடைவெளி இரண்டு கல் (மைல்). இந்த இடைவெளியில் கொடியர் பயம் மிகுதி உண்டு. ஆனால் வறண்ட எனக்கு அப்பாதையில் கொஞ்சமும் அச்சம் என்பதே பிறப்பதில்லை. எனக்கு அது பயமற்ற பாதை!

இப்பாதையிலே ஒரு அகன்று விரிந்த ஆலமரமும் பெருங்குளமும் உண்டு. மரத்தின் உயரம் குளத்தின் ஆழத்திற்கு ஏறத்தாழ ஒப்புமையாக அமையும். மாடுகள் குளிப்பாட்டப் படுவதால் அக்குளம் 'மாட்டான் குளம்' என்று மக்களால் அழைக்கப்பெற்றது. அதேபோன்று பேய்கள் தங்கியிருப்பதாக அவ்வாலமரம் மக்களால் கருதப்பட்டமையால் அம்மரமும் 'பேய் ஆலமரம்' என்று காரணச்சிறப்புப் பெயரை எய்திற்று! நான் அப்பாதை வழியாக எதை எதையோ எண்ணிக் கொண்டே அன்று வந்து கொண்டிருந்தேன். கருத்து அலைகளால் என் உள்ளக்கடல் மோதப்பட்டுக் கலங்கிக் கொண்டிருந்தது.

நான் என்னெதிரில் வருவது யாரென்று கூடப் பாராமல் வந்து கொண்டிருந்தேன். ஒரு மோதுதல். அதற்கடுத்து, ஐயோ என்ற அலறல், இவை என் சிந்தனையைச் சிதைத்துக் கருத்தைக் கவர்ந்தன. அலறல் அணங்கொருத்தியின் வாயினின்று வந்தது என்பது தெரிந்து, கண்ணை நன்றாகத் துடைத்துக்கொண்டு நெருங்கிச் சென்

றேன். கந்தலாடை கட்டியிருந்த அவள் என் கருத்திற்கு விருந்தாயினாள். மற்ற எந்தச் சூழ்நிலையிலும் அவள் பருவம் ஆடவர்களிடமிருந்து அவளை ஒதுங்கச் செய்திருக்கும். ஆடவரும் ஒதுங்குவர். ஆனால் நிலைமை இங்கு மாறாயிற்று. அவளது மானென மருளும் விழியும், மயில் நிகர் சாயலும், மாவின் கொய்தளிர் அன்ன நிறமும் என் மனதிற்கு மயக்க மருந்தாயின.

மனது தலைமறந்த அந்த மோகினியைப் பற்றிச் சிந்தனையிலே மூழ்கிவிட்டது. "எங்கே போகின்றாய் இந்த மழையில்" என்று நான் கேட்ட கேள்வி, நாய் ஞாயிற்றைப் பார்த்து நலன் விசாரித்தது போல ஆகிவிட்டது. அவள் என் கேள்விகளுக்குச் செவி சாய்ப்பவளாகத் தெரியவில்லை. மெல்ல மெல்ல மென்கொடியாள் நகரவே, நமக்கேன் இந்தக் கவலை என்று நானும் அவ்விடம் விட்டகன்றேன்.

என்ன இருந்தாலும் தேனைக்கண்ட வண்டு சும்மா பறந்து போய்விடுமா? நான் எப்படி அவளை எளிதில் மறந்துவிடமுடியும்? ஓரடி முன்வைப்பேன். ஒரு முறை பின் பார்ப்பேன். மறு அடி முன்வைப்பேன். மறுபடியும் பின் பார்ப்பேன். இறுதியிலே ஓரிடத்தில் நின்று பார்ப்பதென உறுதி பூண்டேன். அத்தமிழணங்கு, தடம் பிறழ்ந்து தடாகத்தை எய்தியது என் கருத்திலே களங்கத்தை நிரப்பியது. வழி தெரியாது விழிக்கின்றாள் வனிதை என்று வாய்விட்டுச் சொன்னேன். மழையோ ஓய்ந்தபாடாகத் தெரியவில்லை. வீட்டின் நினைவு விரைவில் அவ்விடத்தை விட்டகலச் செய்தது.

விரைந்து சென்று வீட்டிற்குள் நுழைந்தேன். நனைந்த ஆடைகளைக் களைந்து விட்டு உலர்ந்த உடைகளை உடுத்திக் கொண்டேன். என் சிந்தம் மீண்டும் அச் சிறி யளையே எண்ணிச் சென்றது. தேறுதலிலும் ஆறுதலி லும் தெளியாத சித்தமுடன், கையிற் குடையை எடுத் துக் கொண்டு. கோதையை நாடி வெளியே புறப்பட்டேன். என்னை அறியாமலேயே என் கால்கள் விசை கொடு சென்றன. அப்பெண்ணைப் பற்றிய வரலாற்றை அறிய வேண்டுமெனும் ஆவல் அதிக வேகத்தையும் ஊக்கத் தையும் தரவே, அதிவிரைவில் அவ்வணங்கு நின்று கொண்டிருந்த குளக்கரையை எய்திவிட்டேன்.

குளக்கரையின் ஒரு மூலையிலே, அதாவது மடவா யின் அருகிலே அந்த மடமாது நின்று கொண்டிருந்தாள். அவள் அண்மையிலே நெருங்கினேன். அவளோ உடைந்த உள்ளத்துடன் சிறிதும் அசையாது நின்றிருந்தாள் சித்திரம் போல! வழி தப்பி வந்தாளில்லை, இவள் தனக் குத்தானே குழி தோண்டிக் கொள்ள வந்தாள் போலும். பேதை உள்ளம் படைத்தவள்! இவள் கொண்ட வேதனை என்னவாக இருக்கும்? எதற்காக இவள் இப்படிப்புறப் பட்டு வந்துவிட்டாள்? என்றெல்லாம் நான் எண்ணிக் கொண்டிருக்கையில், அம்மென்கொடியாள் மேல் நோக்கி விரித்தாள் தன் மென் கரங்களை! உயிர் போக்க உறுதி கொண்டாளோ என உன்னி ஓடியநான் விசைபோல் பற் றிக் கொண்டேன் அவ்விள்ளரிய மெல்லியளின் நல் லுடலை!

குடையை ஒரு கையிலும், கோதையை ஒரு கையிலும் பிடித்திருந்த கோலத்துடன் குளத்தருகில் நின்ற நான்

பிடித்துக் கொண்டு சென்றவுடன், அம்மென்மலரானை மெல்லப் பெயர்த்தெடுத்தேன். 'நீ ஏன் இக்கொலைச் செயல் செய்யத் துணிந்தாய்? அப்படி நீ எய்திய ஏமாற்றம் என்ன?' என்பன என் நாவினின்று வெளிவந்த கேள்விகளாகும். 'விரும்பாத கணவனுக்கு வேண்டாத முறையிலே என் விவாகத்தை நடத்த என் பெற்றோர் விழைந்தார்கள். அதன் விளைவுதான் இது!' என்பது அவள் தந்த பதிலாகும். நாக்குழறிக்கொண்டே அவள் தந்த பதில், என்னை 'அவளோர் நாவலைப் படைத்தவள்' என்ற முடிவுக்கு வரச்செய்தது!

'இதற்காகவா இச்செயல் செயவேண்டும்?' என நான் கேட்ட கேள்வி அவளது கோபத்தீயைப் பெருக்கியது. 'இது இழிசெயல் என்பது உங்கள் சித்தாந்தமோ? உயிரையே உடலை வைக்கும் உயர் செயல் என்பதுணராமல் பேசுகின்றீர்கள்! இன்று நானாகப் போக்கிக் கொள்ளும் உயிரை, பின்னரில் அவர்களாகவே போக்கிக் கொள்ளச் செய்துவிடுவார்கள் என்பது தெரிந்துதான் என் இறுதியிலே உறுதி கொண்டேன்' என்று அவள் தந்த செறிவுரையிலிருந்து அவள் ஓர் சிறந்த படித்த பாவை என்பதுடன், பிடித்த காதலனுடன் வாழுகின்ற கொள்கையையும் உடையவள் என்பதனைத் தெரிந்து கொண்டேன்.

'இவ்வுலகத்தில் கண்ணற்றவன், காலற்றவன் வாழ விரும்புகின்றான். மேலும், உடுக்க உடையும், இருக்க இல்லமும் அற்றவன் வாழ விரும்புகின்றான். அன்றியும் உழைக்க முடியாத அதேசமயத்தில் பிழைக்கவும் முடியாதவனும் வாழ விரும்புகின்றான்; இன்னும், மதியற்றவனும் மானமற்றவனும் வாழ விரும்புகின்றான். ஏன், நீ,

மட்டும் மாள விரும்புகின்றாய்? மாண்டு போவது என்பது மனமும் ஒடிந்த மாக்கள் செய்கின்ற செயல் அல்லவா? இவ்வளவு படித்த நீ ஏன் இத்துறையில் இறங்கினாய்?' என்று நீதிபதி நிலையிலே நின்று நியாயம் அறிய விரும்பினேன் நான்.

'சங்கடத்தில் சாவதே நன்று என்றவன் தமிழினத்தவன். காதல் காதல் காதல் காதல் போயிற் சாதல் சாதல் சாதல் என்று கூறியவன் தமிழினத்தவன். மயிரிழக்கின் உயிர் வாழாக் கவரிமான் என்று எடுத்துரைத்தவன் தமிழினத்தவன். நானும் அத்தமிழ்ப் பெருமக்களின் வழித்தோன்றல். எனவே மதி கெட்டு, மானம் போய், வேண்டாத கணவனுடன் வாழ்வதிலும், இறப்பதிலே இன்பம் உண்டு என்று எண்ணியதில், என்னைத் துணிந்ததில், பிழையே இல்லை. கோழையும் குடிசை புற்றவர்களும குவலயத்தில் உயிர் வாழ்விதிலே குதூகலம் அடைகின்றார்கள் என்று சொன்னால் அதற்கு அவர்களின் அறியாமைதான் காரணம்!' என்று அவள் தந்த பேருரை என்னைப் பேச்சறச் செய்தது.

அவ்வணங்கின் வரலாற்றை அறிய விரும்பிய நான், நடந்தவை 'விரித்துரைப்பாய்' என நவின்றேன். 'நடந்தவை உரைக்க இதுவல்ல நேரம்' என்று வெட்டு ஒன்று துண்டு இரண்டாக அவள் பதில் தந்தாள். என்ன செய்வது என்று நான் எண்ணுகையில், 'என்னை வாளா விட்டு விடுங்கள்' என வேண்டினாள் அவ்வனிதை. 'இறப்பையேல் நானும் இறப்பேன்' என்று அவள் பாட்டிற்குப் பின்பாட்டுப் பாடினேன். 'போக்கிடம் அற்றவளுக்கு வாழ்விடம் கிடையாதே' என்று அவள் சொன்னாள் மெதுவாக.

'என் உயிரின் தேக்கமாகிய உனக்கா போக்கிடம் கிடையாது?' என்று நான் கேட்டேன் புன்னகை பூத்த முகத்தோடு!

சித்தம் இசைந்தால் ஒத்துவாழலாம் என்று காதல் கட்டிடத்தின் முதற்படியிலே ஏறியவளைக்கு அவளது மௌனம் சம்மதத்தின் அறிகுறியைத் தெரியப்படுத்தியது. மௌனத்தின் எல்லை அவளைச் சிரிப்பின் துவக்கத்திலே கொண்டுவந்து நிறுத்தியது. 'சிரிப்பு சம்மதத்தின் குறிப்புத்தானே' என்று நான் கேட்டேன். 'அது தெரிந்தால் பின் கேட்பானேன்' என்றாள் அவ்வாரணங்கு. ஓருயிர் ஈருடல் என்பதின் உட்பொருளை அன்றுதான் என் அநுபவத்தால் நான் அறிந்து கொண்டேன். அளவு கடந்த துக்கத்திலும், களிப்பிலும் பேச்சொலி பிறப்பதில்லை என்பதன் உட்கிடக்கையும் உணர்ந்து கொண்டேன். முகம் புன்னகை கொள்ளவே உடல் பூரிப் பெய்திற்று. யானைநடை அன்ன நடையாக இருவரும் என் வீட்டிற்குள் வந்து புகுந்தோம். புகுந்தவர்கள் பழையன களைந்து புதியன உடுத்திக் கொண்டோம்.

காதல் வாழ்வு துவங்கியது!

மீனுள்

நான் வளமுள்ள வீட்டிலே பிறந்தவள், வறுமையின்றி வாழ்ந்தவள். என் தந்தை அரங்கநாத முதலியார். தாய் அன்னம். அண்ணன் தம்பி, அல்லது அக்காள் தங்கை என்ற பேச்சிற்கு இடமே இல்லாத முறையில், நான் ஒருத்திதான் என் பெற்றேருக்கு ஒரே பிள்ளையாக அமைந்தேன். ஒரு பிள்ளையாதலால் அருமந்த மகளாக வளர்க்கப்பட்டேன். என் வீட்டிற்குள்ளே, என் பேச்சிற்கு மறு பேச்சு எழுவதே இல்லை. இப்படியாக என் விருப்பப்படி இன்பமாக என் இளமைப் பருவத்தைப் போக்கினேன். இது காறும் கவலையின் நிழல் கூட என் கருத்திலே விழுந்ததில்லை.

ஏழைகள் மட்டுந்தான் கவலைகளுக்கு உள்ளாகித் துன்பப்பட்டுக் கதறுகிருர்கள் என்று எண்ண வேண்டாம். செல்வம் படைத்த பெருமக்களும், கவலைகொண்டு தான் நாளும் நலிகின்ருர்கள். கூழுக்கு உப்பில்லையே என்பது ஏழையின் கூக்குரல், பாலுக்குச் சீனியில்லை என்பது பணக்காரனின் பதறல்—ஆக இருவருக்கும் துன்பம் ஒன்றுதான்! கவலை, ஏழை, பணக்காரன் என்றெண்ணி யாரையும் வாட்டுவதோ, விட்டுவிடுவதோ கிடையாது. கவலையின் கண் முன்னர் ஏழையும் பணக்காரனும் ஒன்றுதான்! ஏழை பணம் இல்லையே என்று ஏங்குவதால் கவலை அவனை வாட்டுகின்றது. பணக்காரன் மேன்மேலும் பணம் சேர்ப்பதில் கவலை கொள்ளுகிருன். ஆக இருதிறத்தாரும் பணத்தை வரவேற்கத்

தான் இவ்வளவு பாடுபடுவதெல்லாம்! எது முறை எது முறை யற்றது என்பது வேறு கேள்வி. இப்போது இருநிறத்தாரும் கவலைப்படுகின்றார்களா? இல்லையா? என்பதுதான் நாம் அறியவேண்டுவது. ஆர அமர ஆழ்ந்து சிந்திப்போமாயின் அவ்வழியில் கவலை கொள்ளா தவர்களை இருக்க முடியாது என்ற முடிவுக்குத்தான் நம்மால் வரமுடியும்.

இன்ப துன்பம் என்பன மக்கள்மாட்டு மாறி மாறி வருவனவாகும். இன்பத்தைத் தொடர்ந்து நுகர்ந் தாரும், துன்பத்தைத் தொடர்ந்து தவிர்த்தாரும் உலகத்திலே ஒருவருமே இல்லை என்பது யாவரும் ஒப்பும் உண்மையே. ஒருவன் வாழ்விலே முக்கால் பகுதியைத் துன்பத்திலே கழிக்க நேரிடுவதுமுண்டு, அக்காலங்களில்தான் அவனுக்குத் ' தற்கொலை ' என்ற நினைப்பும், இப்படிப் பிழைக்கலாம் என்ற தவறான கருத்தும் பிறக்கின்றன. துன்பம் என்பதற்கு வாழ்விலே ஏமாற்றம் என்பது தான் நேரடியான பொருள். வாழ்விலே ஏமாற்றம்தான் விரும்புகின்ற பொருள் கிட்டாததால் ஏற்படுகின்றது. இதனை நன்கு தெரிந்த நல்லறிஞர்கள், 'ஆசையை அகற்றிவிடு' என்று சொல்லுதலின் உட்கிடக்கை இதுதான்!

நான் வளமுடன் வாழ்ந்து வந்தேன் என்பதற்காக என்னை வருத்தம் வாட்டாது விட்டுவிட வில்லை. பருவமடைந்து பக்குவமானேன். இன்றைய நிலையை ஒட்டிக் கூறவேண்டும் என்று சொன்னால், 'நான் கலியாணம் என்னும் சந்தையிலே விற்பதற்குத் தகுதி யுள்ள பெண் ஆனேன்' என்று சொல்லலாம். கலியாண

மார்க்கெட்டிலே என்னை விலை கொடுத்து வாங்குவாரை நாடி ஏங்குவாராயினர் என் தந்தை. கலியாணம் என்பதை எழுத்தளவிலே, தவறினால் எட்டளவிலே திருமணம் என்று சொல்லலாமே தவிர்த்து, உண்மையில் செயலளவிலே 'திமணம்' என்றுதான் சொல்ல வேண்டும். திருவோ மணமோ இல்லாத ஒன்றை எப்படித் திருமணம் என்று சொல்லலாம்? அதனால்தான் இன்றையக் கலியாணங்களுக்குத் 'திமணங்கள்' என்று பெயரிட்டு அழைப்பார்களாயின், அவற்றிலே உண்மையும் பொருளும் உண்டு என்று நான் சொல்லுகிறேன்.

காதலர் இருவர் கருத்தொருமித்து, ஆதரவுபட்ட இன்ப வாழ்க்கை, தலை, இடை, கடைச் சங்கக் காலங்களுடன் நின்று விட்டது. ஒத்த வயதும், ஒத்த குணமும், ஒத்த நலனும், ஒத்த கல்வியும் வாய்ந்த மிகச் சிறந்த மணங்களெல்லாம் பேச்சு மேடையளவிலேயே நின்று விட்டன. ஒரு ஆவிற்கு இரு கோடு பூத்தாலென்ன என்று புகல்கின்ற காதலர் வாழ்வெல்லாம் கதைப்புத்தகங்களுடன் நின்று விடுகின்றன. நாடகத்தில் காவியத்தில் காதல் என்றால் நன்றும் என்று நவில்கின்ற மக்கள், கூடத்தில் கிணற்றோரத்தில் தங்கள் பிள்ளைகள் காதல் புரிகின்றார்கள் என்று சொன்னால், உறுமுகின்ற நிலையிலே தான் இன்று வாழ்கின்றார்கள். இவற்றைக் காணுகின்ற அறிவுடையோர் நெஞ்சம் நெருப்பென எரியாது நீர்பூத்து அவிந்து விடுமா?

"மாட்டினிரு கொம்புகள் போல் மாநிலத்தில் காதலர்கள் நாட்டமுடன் வாழ்ந்திருத்தல் நன்றென்று சொன்னவெலாம் பாட்டோடு போயினவோ? பாழான

மக்களெலாம் ஏட்டில் படித்தவற்றை ஏதோ நடைமுறையில் காட்டி ஒழுகுதற்குக் கற்கின்றனர்? அன்றேல் நாட்டிற்கு நன்மை உண்டோ? நாடு பயன் பெறுமோ?" என்ற பாட்டினை அறிவுடையார் வாய் இசைக்காது வாளா இருக்குமா?

நான் விற்பனைப் பொருள் ஆகிவிட்டேன். பிரதாப முதலியாரின் மகன் அழகப்ப முதலியார் என்பவருக்கு நான் விற்கப்படவேண்டிய பொருளாகி விட்டேன். எங்களை எந்த வரிசையிலே இரண்டாம்படியான பணக்காரர்கள் என்று சொல்லுகின்றார்களோ அந்த வரிசையில் பிரதாப முதலியார் முதல் பணக்காரர். முதல் பணக்காரர் என்பதுடன் சீர் வகைகள் சிறக்கத் தருவார் என்ற எண்ணமும் என் தந்தையைக் கொள்ளைகொண்டதால், நான் அழகப்ப முதலியாருக்கு விற்கப்பட வேண்டியவள் ஆனேன். அழகப்ப முதலியாரை நினைக்கின்ற பொழுது, 'எட்டேகால் லட்சணமே, எமன் ஏறும் பரியே, முட்ட முட்டக் கூரையில்லா வீடே, குட்டிச் சுவரே' என்ற சொற்றொடர்கள் தாம் நினைவிற்கு வருகின்றன.

பெயர் அழகப்பன் என்பதே அல்லாமல் ஆள் அசட்டப்பன் தான்! கண்கள் இரண்டும் இல்லாத குருடனுக்கு 'நல்லகண்ணு' என்றும், கன்னங்கருத்த மேனியனுக்கு 'வெள்ளையன்' என்றும், செக்கச் சிவந்த மேனியனுக்குக் 'கருப்பன்' என்றும் எதிர்மாறாகப் பெயரிடுவது இந்தக் காலத்திலே பெருகி இருக்கின்ற காரணத்தால், நாம் இத்தகைய நிகழ்ச்சிகளைக் கண்டு, வியத்தற்கிடமே இல்லை. இந்த வழக்கத்திற்கு ஏற்பத்தான், பிரதாப

முதலியாரின் மகனுக்கு அழகப்ப முதலியார் என்று அழகிய பெயர் சூட்டியதும்!

உருவந்தான் இத்தகையது. படிப்பை எடுத்துக் கொள்ளுவோம் என்றால் அதுவும் அப்படித்தான். என்னுடன் படிக்கின்ற போழ்து அவன் வகுப்புகளில் பெரும்பாகம் அடிகள் வாங்காத நாட்களை இருக்க மாட்டா. அப்படி அவன் அடிவாங்காத நாட்கள் சில இருக்கின்றன என்று யாராவது கூறினால், துணிந்து கூறலாம், அந்த நாட்களிலெல்லாம் அவன் உறுதியாகப் பள்ளிக்கூடத்திற்கு வந்திருக்க மாட்டான் என்று! இத்தகு பண்புகள் வாய்ந்திலங்கும் சிறுவனை நான் நன்கு அறிந்திருந்தும் மணவாளனாக ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டுமென்றால், பள்ளம் வெட்டி விடப்பட்டிருந்ததைப் பார்த்திருந்தும் வேண்டுமென்றே அதில் போய் விழுந்த பேதையைத்தான் நான் எல்லா விதங்களிலும் ஒத்திருக்க முடியும்!

நான் அழகப்பனின் அசட்டுத்தனத்தையும் அறிவற்ற நிலையையும் அடுக்கி அடுக்கி எடுத்துச் சொன்னேன் என் தந்தையிடம். அவை எல்லாம் அம்பலம் ஏறவில்லை. என் தந்தை எப்படியாவது இந்த மணத்தை முடித்துவிடவேண்டியதுதான் என்று மூர்க்கத்தனமாகத் துணிந்து விட்டார். எனவேதான் எனது பரிவுரைகள் எல்லாம் அவருக்கு வெற்றுரையாக மாறிவிட்டன. இதுகாறும் என் சொற்களுக்கு மாறு சொல்லியறியாத என் தந்தை இப்போது நான் சொன்ன ஒவ்வொன்றையும் மறுத்துச் சொல்லிக் கொண்டே வந்தார்.

காதல் என்ற தலைப்பிலே நான் என் தந்தையிடம் பேசிய பேச்சுக்கள் எல்லாம் அவருக்கு வேதனை தந்தன. காதல் என்பது சிறு பிள்ளைகளின் அறிவிற்கு அப்பாற்பட்டது; பெரியவர்கள் பார்த்துப் பேசி முடித்துச் செய்து வைப்பதுதான் சிறந்தது என்ற தொழில் முறை கருதிப் பேசுகின்ற என் தந்தையிடம் நான் பகன்ற எல்லாம் விழலுக்கு நீர் இறைக்க முயற்சியாயிற்று. இந்த நிலையிலே இனி இங்கிருத்தல் ஆகாது என்ற ஒரு எண்ணத்தை நீக்கலாக, வேறு எண்ணங்கள் என் உள்ளத்திலே தோன்றியிருக்க முடியுமா?

உடைந்த உள்ளத்துடன் உயிர் வாழவும் விருப்பம் இல்லை. செத்தொழிவோம் என்று உறுதி கொண்டேன். சாவதற்கான எல்லா வழிகளிலும் எது சிறந்தது என்ற ஆராய்ச்சியிலே என் கருத்து ஈடுபட்டது. தற்கொலைகளில் எத்துணை எத்துணையோ வகைகள் என் எண்ணத்திலே தோன்றித் தோன்றி மறைந்தன. அங்ஙனம் தற்கொலை செய்துகொண்ட மக்களின் தொகுதியும் என் மனக்கண் முன்னர்த் தோன்றி மறைந்தன.

மாட்டான் குளத்தைப் பற்றியும், அதில் வீழ்ந்தவர்கள் உயிர் பிழைக்கவே மாட்டார்கள் என்பதையும், சிறு பிள்ளையில் நான் விளையாடிக்கொண்டிருக்கும்போது என் தாய் கூறிய கூற்றுக்கள் எல்லாவற்றினையும் எண்ணிய என் உள்ளம், என்னையும் ஏன் அக்குளத்திற்கு இரையாக்கிக் கொள்ளக்கூடாது? என்றும் எத்தனையோ மீன் குலத்தைத் அருந்தி இன்புற்ற என்னை அக்குளத்தில் உள்ள அத்துணை மீன் குலமும் அருந்தி இன்புறட்டுமே என்றும் எண்ணியது.

எல்லையிய உள்ளம் செய்லாற்றத் துணிந்ததால் நான் வீட்டை விட்டு வெளியே போக உறுதி கொண்டேன். அப்படி வீட்டை விட்டு வெளியே போகும் முன் ஒரு சிறு தாளில் கடிதமொன்று எழுதி வைத்துவிட்டுத்தான செல்லவேண்டும் என்றெண்ணி அங்ஙனம் செய்துவிட்டேன். எழுதிய கடிதத்திலே என் பெற்றோர்களை விளித்து, 'நான் உங்களுக்குத் தகுதியற்ற பிள்ளை. அதனுல்தான் தான் வீட்டை விட்டு வெளியேறுகின்றேன். வேண்டாத மணத்தைப்பற்றி விண்டு விண்டு அழுதேன். நீங்கள் என் நிலை கண்டு நெஞ்சத்தில் சிறிதும் மாறுதல் அடையாமல் இருப்பது கண்டு வெளியேறுகின்றேன். நானுக ஓடிப் போவதாக நினைக்க வேண்டாம். நீங்கள், வாயினுல் கூறுவிடினும் செயலளவிலே ஓடிப்போகத்தான வேண்டும் என்பதனை வெட்ட வெளிச்சமாக்கிக் கொண்டுதான் வந்தீர்கள். உயிர் வாழவும், உங்களுடன் ஒன்றி வாழவும் மன மற்ற உங்களுடைய மகள் 'மீனுள்' என்று கீழே எனது கையெழுத்தை இட்டுவிட்டு வெளியேறினேன்.

அங்ஙனம் வெளியே செல்லத்துணிந்த என் உள்ளம் வேற்றுடை ஒன்றினை ஏற்றுக்கொள்ளாத நிலையிலே வெளியே போக விரும்பிற்றில்லை. தப்பிக்கூடப் பிழைத்துவிடக்கூடாது என்ற எண்ணமும் என்னை வேருடை புனைந்து கொள்ளுதல்தான் நல்லது என்று வற்புறுத்திக்கொண்டே இருந்தது. கடைசியில் என்ன செய்வதென்று எண்ணிக்கொண்டே சமையல்கட்டிற்குச் சென்றேன். அங்கே நல்ல வேளையாகச் சமையற்காரி இல்லை. ஆனுல் நான் நாடிவந்த ஆடைகள் மட்டும் அங்கொன்றும் இங்கொன்றுமாகப் பரப்பிக் கிடந்தன.

அவற்றில் மிகவும் மோசமான நிலைமையில் கிழிந்து கரிப் பிடித்து, அழுக்கேறி இருந்த ஒன்றைத் தேடிப்பிடித்து, நான் அணிந்துகொண்ட பின்னர் எனது ஆடைகளை ஒரு பானையில் போட்டு மூடி வைத்துவிட்டு, வெளியே கிளம்பலுற்றேன்.

நல்ல மழை, பலத்த இடி, வலுத்த மின்னல், இவற்றையெல்லாம் கண்டு கலங்காத வண்ணம் முன் வைத்த காலைப் பின் வைக்காமலேயே நடந்து வந்தேன். எங்களூருக்கும் காட்டினை அருகில் உள்ள மாட்டான் தளக்கிற்கும் ஏறத்தாழ உள்ள பத்து மைல்களையும் பல்லைக் கடித்துக்கொண்டே நடந்து விட்டேன். இறுதியில் குறி வைத்த இடத்தையும் சேர்ந்து விட்டேன். ஆனால் எதிர்பாரா வண்ணம் குறிவைத்து வந்த எண்ணம் கைகூடாமல் போய்விட்டது. தேடிக்க வந்த பேர் வழி என்னைக் கொள்ளை கொண்டுவிட்டார். வந்த எண்ணம் கைகூடாமல் போகவே வந்தாரின் பின் தொடர்ந்தேன். அவர் இல்லம் புகுந்தேன். அங்கு ஊஞ்சலில் நானும், அவருமாக உட்கார்ந்தோம், ஊஞ்சல் நகர்ந்தது; எங்கள் உள்ளமோ உள்நிறை உவகை கொண்டது!

முருகன்

முதற் கடிதம், இரண்டாங் கடிதம், மூன்றாங் கடிதம், நான்காங் கடிதம், ஐந்தாம் கடிதம் இன்னும் இப்படியாக எத்தனையோ கடிதங்கள் எழுதியிருந்தேன் நான், என் தந்தைக்கு! இவற்றில் சிலவற்றிற்குப் பதிலெழுதிய என் தந்தை, வேலப்ப முதலியார் என்னும் பெயருடையவர் 'எனக்கு ஊர் வர மனம் இல்லை. ஊருக்குத் திரும்பவும் வருவேன் என்பதை அறவே மறந்துவிடு' என்றெல்லாம் இரங்காத முறையிலே எழுதிக்கொண்டே வந்தார், மேலே கண்ட சொற்றொடர்களுக்கு விளக்கந்தராமல் விடப்பட்டிருந்தது எனக்குக் கலக்கந்தந்தது மட்டும் உண்மையேயாகும்.

கல்லுங் கரைகின்ற முறையிலே நான் எழுதிய கடிதங்கள் எல்லாம் அவரை எள் அளவுகூட இளகச் செய்யவில்லை. 'முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா' என்ற பழமொழியைப் பழுதறப் படித்தறிந்த நான், இப்போது என் தந்தையார் பண்பு கண்டு, அவரும் மேற்கண்ட இனத்தைச் சேர்ந்தவர் என்பதை நன்கு தெரிந்துகொண்டேன். ஏது பெற்றப்பனையுங் குற்றஞ் சொல்லுகின்றானே என்று எண்ணவேண்டாம், பெற்றப்பன் ஆயினும் குற்றம் குற்றந்தானே?

ஒருநாள் மாலை வேளை. சோலையிலே நான் மட்டுந் தனிமையாக வீற்றிருந்தேன். மீனாள் ஆக்கல் வேலைகளில் ஆழ்ந்திருந்தாள். தாய் உள் வீட்டில் படுத்திருந்

தான். யாரோ கதவினைத் தட்டுவது என் காதினை எட்டியது. 'யாரது?' என வினவினேன். 'நான் தான்' என்று இயற்கையை ஒட்டிய பதில் வந்தது. பதில் கனிவாக இருந்ததுடன் மட்டுமல்ல, பரிதாபமாகவும் இருந்தது. எனவே நான் மேலும் வினாவிடைகள் நடத்த விரும்பாதவனாய் விரைந்து சென்று கதவினைத் திறந்தேன். அங்கே காட்சி தந்த உருவம் கண்களிலே களிப்புணர்ச்சியைப் பீறிட்டெழச் செய்தது. அது வேறு யாருமில்லை, தணிகாசலஞ் செட்டியார்தான்!

தணிகாசலஞ் செட்டியார் என் தந்தையுடன் ஒரே கப்பலில் அயல்நாடு சென்றவருள் ஒருவராவார். இன்னுஞ் சொல்லப் போனால் என் தந்தை சென்ற 'கைப்பின்' என்னும் பட்டியத்திற்குத்தான் செட்டியாரும் சென்றிருந்தார். எனவே நான் அவரைக் கண்டவுடன் நிலை கலங்கினேன் என்றால் அது மிகை அல்ல! உண்மையிலே அவரைக் கண்டதும் உவகைகொண்ட என் உள்ளத்திற்கு உலைநீரை உவமை கூறலாம்.

நான் செட்டியாரை அழைத்துக்கொண்டு, தோட்டத்திற்குள் புகுந்து, அங்கிருந்த நாற்காலி ஒன்றினில் அவரை இருக்கச் செய்த பின்னர், நானும் மற்றொரு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன். என் தந்தையின் முழு வரலாற்றையும் செட்டியாரின் மூலம் கேட்டறிய வேண்டுமென்ற விருப்பம் எனக்கு நிறைய உண்டு. அதனை இன்று நிறைவேற்றிக் கொள்ள விரும்பி, பேச்சின் துவக்கத்திலேயே 'என் தந்தை' என்று சொல்லி இழுத்தேன். 'சிங்காரி ஒருத்தியுடன் சிங்காரமாக வாழ்கின்றார்' என்று, எச்சத்துடன்

விடப்பட்ட சொற்றொடருக்குச் செட்டியார் முற்றுப் புள்ளி வைத்தார்.

மேலும் அங்கு நடந்த உரையாடலிலிருந்து எனக்கு இரண்டு தம்பிகள் பிறந்திருப்பதாகத் தெரிந்துகொண்டேன். ஏனைய பேச்சுக்கள் எல்லாம் அதிகப் பிரசங்கித் தனத்தின் பாற்படுமாகலின் இம்மட்டுடன் விட்டுவிடுகின்றேன். அவை பயனற்ற உரையாடல்களுங்கூட!

'தந்தை வருவார், தந்தை வருவார், இந்தக்கப்பலில் வந்து விடுவார், அடுத்த கப்பலில் வந்து விடுவார்' என்று சொல்லிச் சொல்லி என் தாயின் ஆவலை அதிகப் படுத்திக்கொண்டே வந்தேன். எத்தனை நாட்களைத்தான் என்றால் இப்படி ஏமாற்றிக் கழிக்க இயலும்? இனியும் பொய்களைப் புனைந்துரைத்துக் கொண்டிருக்க எனக்கு மன உறுதியில்லை. தொலைநாடு சென்று தாய் நாடு மீண்டாரின் தொகையோ நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே செல்லுகையில், எப்படியும் என் தந்தையின் செய்தி வெளிவந்து விடுமாயின், இது தாய்க்கும் எட்டாமலா போய்விடும்? எனவே உண்மையை உரைத்து விடுவதுதான் சாலச் சிறந்தது என எண்ணிய என் உள்ளம், ஒருநாள் உண்மையைத் தாயிடம் உரைக்கும் அளவுக்கு உறுதியைத் தந்து விட்டது. எனவே நான் நாக்குழற, மெய் துடிக்க எல்லாவற்றையும் என் தாயிடம சொல்லிவிட்டேன்.

தந்தையின் செயல் கண்டு நானே தளர்வுள்ளம் எய்தினேன் என்றால் என் தாயைப்பற்றிச் சொல்லித் தானா தெரிய வேண்டும்? பசுமரமே எரிகின்றபோழ்து

பட்டமரம் எரிவதற்குக் கேட்கவா வேண்டும்! தந்தையைப்பற்றி நான் கூறிய கூற்று அவருக்குக் கூற்றுக மாறிவிடுமே என்று எண்ணியிருந்தால், அத்தகைய எண்ணத்தின் சாயல் என்னுள்ளத்திலே விழுந்திருந்தால், நான் என்னவாயினும் ஆகுக என எண்ணி ஒன்றினையுங் கூறியிருக்கவே மாட்டேன்.

ஓயாத கவலை, உடைந்த உள்ளம், தளர்ந்த வயது இவை என் தாயைச் சாய்ப்பதற்குச் சதிகாரர்களாக மாறின. தந்தை அங்கு மகிழ்ந்திருக்கத் தாய் இங்கு மாண்டுபோக நான் இருவரையும் பிரிந்த நிலையிலே வாடுகிறேன்! என் தாயை எண்ணுகின்ற உள்ளம் பாசத்தால் தளரும், என் தந்தையை எண்ணுகின்ற உள்ளம் கோபத்தால் வளரும்! என் தந்தையின் நெஞ்சம் இரும்பா அன்றி இருங்கல்லா என்றுகூட நான் எண்ணுவதுண்டு. இரும்பும் இருங்கல்லுங்கூட அதிக வெப்பத்தில் நீராதல் உண்டென்று வல்லுநர்கள் சொல்லுகின்ற இந்தக் காலத்திலே அவருடைய உள்ளத்திற்கு எதனை உவமை கூறுவது? "ஏனோ தெரியவில்லை எதென்றுரைப்பதோ" என்ற அடிகள்தான் நினைவிற்கு வருகின்றன.

அறுபது வயதான ஒருவர் ஆசைநாயகி ஒருத்தியுடன் வாழ விரும்புவதாக நாவல்களிலே கண்டு நான் மனங்கலங்கியது உண்டு. ஆனால் இன்றோ கண்ணாரக் காணுகின்றேன் என் தந்தை சிங்காரியுடன் அகமகிழ்ந்து அணைந்து வாழ்வதை! கொழுத்த பணமிருந்தால் போதும் நரைத்த வயதிலென்ன, சாகின்ற அப்பொழுதுகூட நான்கு கலியாணங்கள் செய்துகொள்ளலாம் போலும்.

காதல் என்ற சொல் இன்றையக் காலநிலையை யொட்டித் தமிழ் அகராதிகளிலின்றும் அகற்றப்படவேண்டிய சொற்களில் தலையாயது ஆகும்! காதல் என்பது காசிற்கு அகப்படுகின்ற பொருளாகக் கடைகளில் கட்டிவைத்து விற்கப்படுகின்ற விற்பனைப் பொருளாகக் கருதப்படுகின்றது. கோதில் உளம் இரண்டு ஒன்றுகூட அங்கே பிறப்பது காதல் என்று கூறுகின்ற காதலின் இலக்கணம் எல்லாம் இலக்கியங்களோடு நின்று விடுகின்றன. நடைமுறையில், காதல் என்றால் என்ன என்றுகூட அறியாத மக்கள் கணக்கற்றவர்கள் இன்று வாழ்கின்றார்கள் என்று கூறுவதிலிருந்தே காதல் போன போக்கு நன்கு தெரியவில்லையா?

அறுபது வயதான காலத்திலே, காடு வா வா என்று வரவேற்பு இதழ் வழங்குகின்ற பருவத்திலே, ஒருவன் "சாந்திக் கல்யாணம்" செய்துகொண்டான் என்றால் அதிலே பொருளுண்டா? ஒரு பெண் இம்மணத்திற்கு உடன்பட்டாள் என்று சொல்லுகின்ற காலை, அவளைப் பெண்ணென்று பெயரிட்டழைப்பதைக் காட்டிலும், மயக்கந்தரும் ஒரு பிண்டம் என்றோ கூடு என்றோ கூறுவதிலே மிக மிகப் பொருத்தமுண்டு. அவள் தன்னைத் தானே, 'தான் ஓர் நலம் பேண வந்த நன்மணி' என்று பெருமிதந்தோன்ற எண்ணுவாளாயின், பணத்தின் ஆசையால் பிறந்த இம்மணத்தில் தன் மனத்தை ஒப்புவாளா? இத்தகு பெண்கள் வாழுகின்ற நாடு, நாடல்ல. . . .அவையெல்லாம் அடவி, காடு, கொடும்புலி வாழும் குகைகளே!

ஆயினும் தந்தை பாவம் — அம்மயக்கப் பிண்டத்தின் பாவம் இவற்றை அப்பாவங்களின் பயனாய் வந்த

சிறுவர்கள் மீது செலுத்தலாகாதன்றோ? ஆகவே என் தம்பி முறையான அச்சிறுவர்களைக் காணமட்டும் விரும்பினேன்.

அன்று ஞாயிற்றுக்கிழமை. எங்களுக்குக் கடையடைப்பு நாள். எனவே, நான் என் வீட்டுத் திண்ணையிலே சாய்ந்து கொண்டிருந்தேன். என் உள்ளம் எங்கெல்லாமோ சென்று சென்று மீண்டது. என் உயிர்த் தோழன் கண்ணுசாமி என்னைக் காணுதற்காக என் வீட்டிற்கு வருவதாகச் சொல்லியிருந்தான். எனவே நான் அவன் வந்தபின்னர் வீட்டைவிட்டு வெளியே போகலாம் என எண்ணியவனாய்க் கையில் ஒரு காவியத்தை எடுத்துக் கொண்டுவந்து மீண்டும் அந்தத் திண்ணையிலேயே படுத்தேன்.

'உண்டாலம்ம இவ்வுலகம்' என்று முதலடியைத் துவங்கி தனது கருத்தை வெளியிடவந்த புறநானூற்றுப் புலவன், எல்லோரையும் ஒன்றெனக் கருதும் நல்லவர்கள் பலர் வாழ்வதினாலேயே இவ்வுலகம் இன்னும் அழியாது இருக்கின்றது என்று கூறி முடிக்கின்றான். இதே கருத்தை 'நல்லாரின் பெரு நிலையம் இந்த வையம்' என்ற அடியின் மூலம் என் கைதனில் இருந்த காவியத்தின் ஆசிரியர் பாரதிதாசனார் எனக்குக் கற்பித்தார்.

ஆம்! கண்ணுசாமி போன்ற நல்லவர்கள் எனக்குத் தோழர்களாக இருப்பதினால்தான் நானுமோர் ஆளாக இந்த வையத்திலே இருக்கின்றேன். இல்லையாயின் வீட்டுக்கவலைக்குப் பயந்து, ஓட்டைக் குடிசையை ஒதுக்கி. நாட்டைச் சுற்றிவரக் கிளம்பியிருப்பேன் பரதேசியாக

பரதேசியாக வாழ்வதிலே எனக்குப் பரமதிருப்தி உண்டு. பரதேசிகளுக்கு வீடு ஒழுகுமே என்ற கவலையோ, நாடு பிரிக்குமே என்ற எண்ணமோ, கேடு மிகுமே என்ற பயமோ சற்றும் இடையவே கிடையாது. அவர்கள் "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்றவரின் பரம்பரையைச் சேர்ந்தவர்கள்!

காவியத்தில் கண்ணும் கருத்துமாகத் திளைத்துக் கொண்டிருக்கும் போழ்து கண்ணுசாமி வந்து சேர்ந்தான். வருக வருக வென வாயார வரவேற்றேன். தனக்கென அமைந்த புன்முறுவலுடன் சிரித்த முகத்துடன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு கண்ணுச்சாமி என்னெதிரிலே வந்து உட்கார்ந்தான். நான் கையில் வைத்திருந்த காவியத்தின் பெருமைகளைப்பற்றிப் பேச வாயெடுத்தேன். ஆனல் கண்ணுச்சாமியோ எனக்கு முன்பே இக்காவியத்தைப் படித்து விட்டதாகக் கூறி அதன் பெருமைகளைப் பெருமிதத்துடன் கூறத் தொடங்கினான். நானும் 'ஆமாம்' எனும் பின்பாட்டுப் பாடினேன் வேறு வழி இல்லை அல்லவா?

இப்படியாக எங்கள் பேச்சு ஒரு இறுதியை எய்தியவுடன் வெளியே போய் வரலாமென்று காலை வெயிலினையும் கருதாது கிளம்பினோம். ஒன்று சொல்ல மறந்து விட்டேனே! என் நண்பன் கண்ணுச்சாமி அதிகமாகப் பொடி போடுகின்ற பேர்வழி அவனை ஒருநாள் உணவை ஒழியென்றால் ஒழிந்து விடுவான். ஒரு நாள் பொடி போடாதிரு என்றால் போடாதிருக்க மாட்டான். அவனுக்கு அவ்வளவு பற்று அந்தப் பட்டணம் பொடியில்!

ஞாயிற்றுக்கிழமைகளிலும் சில கடைகள் திறந்திருக்குமல்லவா, அந்த வழக்கத்தை ஒட்டி வந்த வழியிலே ஒரு சிறு பெட்டிக்கடை திறந்திருந்தது. அந்த கடைக்காரன் தான் எங்களூர்ப் பத்திரிகையின் ஏஜெண்ட்! அந்தக் கடையைக் கண்டதும், கண்ணுச்சாமி கதிபெருவலைக் குத்து மட்டையைக் கையில் எடுத்துக் கொண்டு விரைந்தான். ஆனால் கடைக்காரனோ கையை விரித்து விட்டான் பொடி கிடையாதென்று! அப்போது பார்க்க வேண்டுமே கண்ணுச்சாமியின் முகத்தை! பொன் சட்டிகள் அகப்படும் என்ற எண்ணத்தால் அதிக ஆழத்திற்குக் கிணறு வெட்ட, மண் சட்டிகள் அகப்படுமாயின் கிணறு வெட்டியவனின் உள்ளம் என்ன பாடுபடுமோ அதே பாட்டினைத்தான் கண்ணுச்சாமியின் உள்ளமும் பட்டிருக்கும் என நான் எண்ணுகின்றேன்!

நானும் அவனைப் பின் தொடர்ந்து கடையை நோக்கிச் சென்றேன். அந்தக் கடையின் கதவுகளின் ஒன்றில் ஒரு சிறு துண்டுக் காகிதம், கொட்டை கொட்டையாகக் கருப்பு மையால் எழுதி அச்சடித்துத் தொங்கவிடப்பட்டிருந்தது. அந்தக் காகிதம், பனந்தாரில் இருந்து வெளி வரும் 'பரிதி' என்னும் நாள் வெளியீட்டின் விளம்பரம் என்று ஒருவாறு தெரிந்து கொண்டேன்.

அன்றைய வெளியீட்டின் எல்லாச்செய்திகளின் சுருக்கத்தைக் காட்டிலும், 'அரங்கநாத முதலியார் படுகொலையின் விபரம்' என்பதுதான் என் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது. சட்டென்று அந்தப் 'பரிதி'ச் செய்தித் தாளை வாங்கிக்கொண்டு உட்பக்கங்களைப்புரட்டலானேன். நாலாவது பக்கத்தின் நடுப்பத்தியில் அரங்கநாத முதலியாரின்

படுகொலையைப்பற்றிய வரலாற்றுச் சுருக்கம் விரிவாகப் போடப்பட்டிருந்தது.

காகிதத்தைச் சுற்றிக் கையில் எடுத்துக்கொண்டு, கண்ணுச்சாமியிடம் 'நான் வீட்டிற்குப் போய் பொழுது சாய்கின்ற வேளையிலே உன் வீட்டிற்கு வருகின்றேன்' என்று சொல்லிவிட்டு வீட்டை நோக்கி விரைந்தேன். கண்ணுச்சாமி என்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டானோ தெரியவில்லை. அடுப்பூதி அயர்ந்திருந்த என் மனைவியிடம் எடுத்தோதினேன் சேதியினை!

அரங்கநாத முதலியாரின் படுகொலை!
நேற்று நள்ளிரவில்

"அரங்கநாத முதலியாரும் அன்னம் என்ற அவர் மனைவியாரும், செல்வத்திலே பிறந்து செல்வத்திலே வாழ்ந்து வருகின்றவர்கள். இவர்கள் பனந்தூரின் பணக்காரர்கள் வரிசையிலே இரண்டாவது இடம் பெற்றவர்கள். இவர்களுக்கு ஒரே பிள்ளை தான் உண்டு. அதுவும் பெண் பிள்ளை! பெண் பூப்பு எய்தியதிலிருந்து கலியாணம் செய்வதற்காகப் பெற்றோர்கள் பெரிதும் பாடுபட்டு வந்தார்கள். இறுதியிலே, பெரு முயற்சி செய்து மணம் பேசி முடித்து விட்டார்கள். முதல் பணக்காரர் பிரதாப முதலியாரின் மகனாகிய அழகப்ப முதலியார்தான் மணமகனாகத் தேர்ந்தெடுக்கப் பெற்றிருந்தார். பெண் மாப்பிள்ளை தனக்கு விருப்பமின்மையால்தான் இம்மணத்திற்கு உடன்பட முடியாதென்று உரைத்து வந்தாள். பெற்றோர்கள் மனம் மாறவே இல்லை. அவர்கள் எப்படியாவது இம்மணத்தை முடித்து விடுவதென்று கங்கணங் கட்டிக் கொண்டிருந்தார்கள். இதனை அறிந்த பெண் ஒரு

நாள், மனைவியின் பின்னலையும் பிடியையும் மதியாது வீட்டி லிருந்து வெளியேறிவிட்டான். பெற்றோர்கள் போலி ஸுக்குத் தகவலைத் தெரிவித்துவிட்டு, மிகவும் துக்கத் துடன் வாழ்ந்து வந்தார்கள்.

நேற்று நள்ளிரவில் முதலியாரும், அவரின் மனைவி யாரும் உள் வீட்டில் தாழிட்டு உறங்குகின்றபோழ்து யாரோ கதவினைத் தட்டுகின்ற ஒலிகேட்டு, முதலியார், யாரென வினவினார். வந்தவர்கள் 'போலிசார்' என்று பதில் சொன்னார்கள். தன் பிள்ளையைப்பற்றிய செய்தி யினைப் போலிசார் அறிந்துகொண்டமையால் தான் இந்த நடு இரவில் நம்மிடம் தெரிவித்துவிட்டுப் போக வந்திருக்கிறார்கள் என எண்ணிய முதலியார் விரைந்து சென்று கதவினைத் திறந்தார். வந்தவர்கள் கத்தியும் கையுமாக வந்தமையால் சட்டென்று கதவினைத் திறந்து முதலியாரைச் சாய்த்துக் கொன்றுவிட்டார்கள். அன்னை என்றும் முதலியாரின் மனைவியார் அவற்றைக் கண்டு மனம் பொறுமல் 'ஆ' வென்று கூச்சல் இட்டார் கள். அன்னை விட்டார்கள அலறிப் புடைத்துக் கொண்டு ஓடி வந்தார்கள்.

இவர்கள் எல்லாம் வருவதற்குள் வந்த திருடர்கள் மாயமாய் மறைந்தார்கள். போலிஸாருக்குச் செய்தி எட்டவே அவர்களும் விரைந்து வந்து சேர்ந்தார்கள். விபரங்களைக் கேட்டெழுதிக்கொண்டு, பிணத்துடன் போலிஸ் ஸ்டேஷனை அடைந்தார்கள் இப்போது அக்கொலைபற்றித் திவிரமாகப் புலன் அறிந்து வரு கின்றார்கள்."

மேற்கண்ட நிகழ்ச்சிகளை முகஞ்சுழித்து வாய் கோணி, உளம் பதைத்து ஒருவாறு படித்து முடித்தேன். அவற்றைப் படிக்கின்ற பொழுது நானே படாத பாடு பட்டேன் என்று சொல்லும்போது அவளைப்பற்றிச் சொல்லவா வேண்டும்? சொல்லி முடியாது, சொல்லு தற்கு ஒண்ணாது!

விழுந்தாள், விம்மினாள், விங்கினாள், பெருமூச்சுயிர்த் தாள், எழுந்தாள், ஏங்கினாள், எண்ணினாள், எதை எதையோ எண்ணித் தொழுதாள், துயருழந்தாள், துவங்கினாள், அழுதாள். என்றால் இவற்றையெல்லாம் பார்த்துப் பொறுத்துக்கொண்டிருக்க ஏலவில்லை! அவளை அணுகி ஆறுதல் சொன்னேன்: தேறுதல் மொழிந்தேன்; வேறு என்னவெல்லாமோ செய்து பார்த்தேன். படித்த பெண்ணாயிற்றே என்று கூடச் சுட்டிக் காட்டினேன். எல்லாம் செவிடன் செவ்வழி ஊதிய சங்கேயாயிற்று.

பின்னர் என்றால் என்ன செய்ய முடியும்? அவளை ஒரு மெத்தையிலே போய்ப் படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு நான் எனக்கு ஆறுதல் சொல்லிக் கொள்ளுதற்காய் ஆள் நடமாட்டம் அற்ற ஆற்றின் கரைப்பக்கம் நடந்து சென்றேன். ஆற்றின் இருமருங் கிலும் அழகிய மலர்கள் மலர்ந்து மனத்திற்கு மகிழ்ச் சியை அள்ளி அள்ளித் தந்தன.

இன்பத்திற்குப் பின்னால் துன்பம் மறைந்து கிடப் பது போன்று பூச் செடிகளின் பின்னால் முட் செடி களும் மறைந்து மண்டிக் கிடந்தன. ஆற்றின் அருகில்

சென்ற ஒற்றையடிப் பாதை என்னை நெடுவழி அழைத்துச் சென்று விட்டது. பூக்களில் அவற்றின் மது வருந்திப் பறித்த பொன் வண்டுகளையும் கண்ட என் கண்கள் அவற்றை என் கருத்திலே படம் பிடித்துக் காட்ட, நான் பின்னை எண்ணி எண்ணி மீளாத் துயருற்றேன். துள்ளி எழுகின்ற மீன்கள் பொங்கி எழுகின்ற என் உள்ளத்திற்கு வேதனையைத் தந்தன!

அமைதியை நாடிச் சென்ற எனக்கு ஆறு அவதியைத் தந்தது. சித்தம் எதிலும் செல மறுத்துவிடவே நான் மீண்டும் வீட்டிற்குத் திரும்பிச் செல்ல விரும்பினேன். திரும்பிப் பார்த்தேன். தீயின் சுவாலை என்னைத் திடுக்கிடச் செய்தது. ஏன் இன்று இப்படித்து எரிகின்றது நம்மூர் என எண்ணிய எனக்கு உள்ளூரின் சச்சரவுகள் நினைவிற்கு வந்தன. என் வீட்டின் அருகில் உள்ள இடங்களெல்லாம் தீயின் வாய்பட்டுக் கரியாதல் என் கண்ணிற்குத் தெரிந்தமையால் நான் திடுக்கிடும் உள்ளத்துடன் காற்றென வீடு நோக்கி ஓட்டமாக ஓடிவந்து கொண்டிருந்தேன்.

என் கால்களில் குத்தி ஆழம் பார்த்தன சில முட்கள், கட்டியிருந்த ஆடையை இரண்டாக்கின சில முட்கள், காலில் குத்திக் குருதியை எடுத்து இரத்தப் பரிசோதனை செய்தன சில கற்கள். நான் இவற்றை யெலாம் பொருட்படுத்தாமல், பெரு நடையும், ஓட்டமுமாக வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தேன். நான் வந்துகொண்டிருந்த நிலையைக்கண்டவர்கள் என்னை ஒருபைத்தியமென்றோ, கொலைகாரன் என்றோ நினைப்பார்களாயின் அவர்களை அதற்காகக் குற்றஞ் சொல்லுதலில் பயனே இல்லை! ஏனென்றால்

என் நிலை அப்போது அவ்வளவு மோசமாகத்தான் இருந்தது. இத்தகு குலைந்த கோலத்துடன் நான் என் வீட்டை நெருங்கிக் கொண்டிருந்தேன்.

நான் என் வீட்டை நெருங்கினேனோ அல்லாமல் நான் நினைத்துப் பயந்தது போன்று நெருப்பு என் வீட்டை நெருங்கிற்றில்லை. என் வீட்டிற்கு அப்பாலேயே தான் 'அக்கினியார்' தன்வேலையில் ஆழ்ந்திருந்தார்.

எத்தனை மக்கள் வாழ்வை அத்தீ வறுமையை உண்டுபண்ணுமோ என்று கலங்கி நின்றேன். அச்சமயம் திடீரென்று எவரோ இரு போலீஸ்காரர்கள் கையைப் பிடித்து நிறுத்தினார்கள். நான் அரசியலாரால் காப்பாற்றப்பட வேண்டியவன். அவர்களோ அரசியலைக் காப்பாற்ற வேண்டியவர்கள் அல்லவா?

மக்கள் தனிப்பட்ட உரிமைக்காகப் போராடுகின்ற இந்தக் காலத்திலே, தனித் தனியாய்ப் பிரிந்து வாழ வேண்டுமென்று 'ஸ்தான்' கேட்கின்ற இந்தக் காலத்திலே, சுதந்திரம் எங்கள் பிறப்புரிமை என்று எல்லோரும் விண்ணார வாய் வேதாந்தம் சொல்லுகின்ற இந்தக் காலத்திலே எனது உரிமையை, எனது சுதந்திரத்தை என் உடன்பாடின்றிப் பங்கப்படுத்திய பேர்வழிகள் யாரென்று மேலும் கீழும் பார்த்தேன்.

போலீஸ்காரர்கள் என்பதறிந்தவுடனேயே, போக்கிரிகளைக்கண்டு நல்லவர்கள் நடுங்குதல் போல நான் நடுங்கி வாய் பேசாது நின்றேன். பேச இயலாதகாலம் பிரிந்தவர்கள் ஒன்று சேருகின்ற காலம் என்று கற்ற பெருமக்கள்

காதலர் இயல்புகளைப் பற்றி இயம்புவதை நான் எண்ணற்ற தடவைகள் கேட்டிருக்கின்றேன். அதுபோன்று போலீஸ்காரர்களைக் கண்டவுடனும் பேச இயலாத காலம் பிறக்கின்றது என்பதனை இன்று அநுபவ வாயிலாக நான் உணர்ந்து கொண்டேன். சிறிதுநேரம் கண்ணோடு கண்ணிணைகள் நோக்கின. வள்ளுவரின் சொல்லுரைக் கேற்ப வாய்ச் சொற்கள் என்ன பயனுமிலவாயின!

சிறிது நேரஞ் சென்றவுடன் 'ஊம்-நட' என்று அவர்கள் இட்ட ஆணை என்னைத் திடுக்கிடச் செய்தமையால் 'எங்கே' என்று நான் கேட்டேன். "அரசியல் விருந்தினர்கள் வாழ்கின்ற அந்த அழகிய மண்டபத்திற்குத்தான்" என்று அவர்கள் விடை தந்தனர், இறுமாந்த முறையில் என்னைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே!

"அயோக்கியர்கள் வாழும் அப்பாழும் மண்டபத்தில் அடியேனுக்கு வேலை என்ன?" என்று நான் மேலுங் கேட்டேன். "இனம் இனத்துடன் வாழ வேண்டாமா? உன் இனத்தவர் வாழுகின்ற அந்த மண்டபத்தில் உள்ள வேலை உனக்கல்லவா தெரிந்திருக்க வேண்டும்! எங்களுக்கு அதுபற்றி ஒன்றும் தெரியாது. இப்போது நட" என்று அவர்களில் ஒருவன் துடுக்காகச் சொன்னான். பின்னொருவன் இன்னுஞ் சிறிது உரத்த குரலில் 'கைதிகள் கேட்கும் கேள்விகளுக் கெல்லாம் நம்மால் பதில் சொல்ல முடியாது. எனவே அவனுடன் வாய் கொடுக்காமல் வா. நாம் சிக்கிரமாகப் போய்ச் சேர்க்கவேண்டும் பாங்குரார்; போலிசுக்கு' என்று காரியத்தில் கண்ணுள்ளவன் போலப் பேசினான்.

நான் யாரு யாருடைய என்று கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்காததால் 'என்னைக் கைதுசெய்த காரணம்என்ன?' என்று கேட்டேன். 'கொலைகாரனையும் திருடனையும் கைது செய்வதற்கு காரணம் சொல்லித்தானு தெரிய வேண்டும்' என்று உபமானப் பொருளைக் கூறி உவமையைத் தெரியப்படுத்தி, என் நெஞ்சத்தில் சொல் ஈட்டியைச் செலுத்தினன் அவர்களில் ஒருவன். "நானு கொலைகாரன்? நானு திருடன்? அப்படியென்றால் நான் செய்த கொலை என்ன? அல்லது நான் செய்த திருட்டுத்தனம் என்ன?' என்று கேட்டேன்.

களவாணிகள் முதாலளிகளாக இருக்கின்றமையின். தொழிலாளிகள் இழிவாளிகளாக ஆகி எல்லாவித இன்னல்களையும் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலை ஏற்படுகின்றது என்று எண்ணிய என் உள்ளத்திலே, 'ஊம் நட. அங்கு எல்லாம் அம்பலமாகும். இப்போது உன்னிடஞ் சொல்லவேண்டிய தேவை எங்களுக்கு இல்லை' என்று அவர்கள் சொல்லி மீண்டும் சொல் ஈட்டிகளைப் பெய்தார்கள். 'கேட்கின்ற கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தேவையற்ற உங்களுக்கு உரிமையைப் பறிசெய்ய எந்தச்சட்டம் இடந்தருகின்றது?' என்று நான் கோபத்துடன் கேட்டேன். "எந்தவூரில் திருடியவன் திருடினதாக உண்மையை ஒத்துக் கொண்டிருக்கின்றான்? திருடவே இல்லை என்று கூறுவதுடன் நில்லாமல், வேண்டாத முறையிலே ஈசனையும் இழுத்துப் போட்டு ஏழாயிரம் வாக்குறுதி (சத்தியஞ்) செய்வான் அத்திருடன். அதுபோன்ற உண்மை நெறி தவறுதவர்களின் கூட்டத்திற்கு இவன் தலைவனாக இருப்பான். எனவே இவனிடம் நமக்கென்ன பேச்சு" என்று ஒருவன் சொல்ல மற்றவன் 'ஆம்' என்று

தலையணைத்தான். இச்சொற்றொடர்கள் என் நெஞ்சைப் பிளந்து அதனுள் பழுக்கக் காய்ச்சிய இரும்பை வார்த்தது போலாயின.

“நானா கொலைகாரன். நான் திருடன்” இச்சொற்றொடர்கள் எண்ணற்ற தடவைகள், என்னையறியாமலேயே என் நாவினின்று வெளிக்கிளம்பிக் காற்றிலே கலந்தன. நான் நடந்துகொண்டு போகும் போதே எனக்கு உலகம் மிகவிரைவாகச் சுழல்வது போன்று தெரிந்தது. சிறிது நேரம் கால்நடைப்பிரயாணம், அப்புறம் மோட்டார்ப் பிரயாணம் இப்படியாக ஒரு மணிக்குள் போக்கற்றவர்கள் வாழுகின்ற போலிஸ் மண்டபத்தை எய்தினோம். அங்கு என் கைகளுக்கு விலங்குக் காப்புகள் அணிவித்தனர்.

எனக்கென்று ஒரு அறை காலியாயிற்று. அதிலே தள்ளப்பட்டேன் தனிமையாக! அப்போது நான்பட்ட பாட்டினை யார் அறியமுடியும்? அந்தத் துன்பத்திலேதான் “நாமென்று போவதற்கு நான் பட்ட பாட்டினைத்தும் தாளம் படுமோ? தறி படுமோ?” என்ற பாரதியாரின் பாட்டுக்கள் நினைவிற்கு வந்து வந்து சென்றன!

மூன்று நாட்கள் என்னை அதே அறையில் அவர்கள் அடைத்து வைத்திருந்தார்கள். அரை வயிற்றுக்கு உணவு எனக்கு அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நிமிடத்தையும் ஒவ்வொரு யுகமாகக் கழித்து வந்தேன். நான் அழுத கண்ணீர் ஆறாக ஓடியது. என்னுடலில் இருந்து ஒழுகிய இரத்தத் துளிகள் ஓடிய ஆற்றுக்கு அழகு செய்தன. இடையிடையே அறையை விட்டு வெளியே வருவேன், தடியர்களிடம் அடி உதைகள் வாங்குவதற்காக!

இரக்கமிலா உளம்படைத்த அந்தக் குடியர்கள் என்னை ஓயாது உதைத்து வந்தார்கள். ஈவு குணமுமற்ற அந்த ஈனர்கள் என்னை இரக்கமற்ற முறையிலே இடித்து வந்தார்கள். ஏழைகள் இன்று சிந்துங் கண்ணீர் ஒரு நாளில் ஒன்றெனத் திரண்டு வஞ்சகர்களை வாட்டும் படையாக மாறும் என்பதனை அந்த மதியற்ற சதிகாரக் கூட்டம் தெரியாது திரிகின்றது என்று நான் எனக்குள்ளாகச் சொல்லிக் கொண்டேன்.

மாட்டு வண்டிக்காரன் மாட்டை அடிப்பது போன்று குதிரைவண்டிக்காரன் குதிரையை அடிப்பது போன்று, போலிஸார் என்னை அடித்து வந்தனர். மாடும் குதிரையும் வாயற்ற பிராணிகள். நானும் என்போன்ற ஏழைகளும் வாயுள்ள பிராணிகள்.. இவ்வளவுதான் இந்த உலகத்திலே ஏழைகளும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு! இன்னமும் நன்றாகப் புரியும்படி கூறவேண்டும் என்னின், ஏழை வாய் திறந்து பேசுகின்ற ஒரு செயல் நீங்கலாக ஏனைய செயல்களில் எல்லாம் விலங்குகளைப் போன்றே வாழ்ந்து வருகின்றான். விலங்குகள் அதனதன் உரிமையாளர்களால் வாட்டி வதைக்கப் படுவது போன்று ஏழைகள் அவரவர்களின் முதலாளிகளால் வாட்டி வதைக்கப் படுகின்றனர்.

ஏழையாகப் பிறந்த ஒரே காரணத்தால் அவர்களின் உடல்களில் ஓடுகின்ற இரத்தம் விலங்குகளின் இரத்தமாக மதிக்கப்படுகின்றது. அவர்கள் உழைத்துப் பாடு பட மற்றவன் பிழைத்து வாழ்கிறான். இத்தகு நீதி இந்த வையத்திலே இருக்கலாமா என்றெல்லாம் எண்ணி நீதியை நாடி நிலையிழந்த என் நெஞ்சத்தின் முன்னர்

மூன்றும்நாட் காலை மூன்று பேர்வழிகள் வந்து நின்றனர். அவர்கள் வருகின்ற காலடி ஓசையைக் கேட்டவுடனேயே, 'பூச்சாண்டி' என்ற சொல்லைக் கேட்டுச் சிறுபிள்ளைகள் பயப்படுவது போன்று அறிவற்ற கோழைகள் பேய் என்ற சொல்லைக்கேட்டு நடுங்குவது போன்று நானும் பீதி கொண்டேன்.

வழக்கம்போல என்னை வெளியே அழைத்து- அல்ல- இழுத்துச் சென்றார்கள். வெளியே வந்தவுடன் என்னைப் பார்த்து 'உனக்கு விடுதலை. உயிர் தப்பினாய். ஊம். நில்லாதே. ஓடு!' என்று என்று ஒரே மூச்சில் மூன்று பேருஞ் சொன்னார்கள். திரும்பிப் பார்த்தேன், 'திரும்பினால்!' என்று உரக்க உறுமினார்கள். திரும்பாது சென்று கொண்டிருந்தேன். தளர்ந்த உடலுடன், வற்றிய வயிற்றுடன் என்னால் நடக்க ஏலவில்லை. இடறிக் கீழே விழுந்தேன். பத்தோடு பதினொன்றாக, அடித்த புண்ணுடன் விழுந்த புண்ணும் என்னுடலிலே இடம் பெற்றது!

மேல் வகுப்பாருக்கு; அதுவுஞ் சிறப்பாகச் செல்வம் படைத்தவர்களுக்குச் சட்டங்கள் செய்கின்ற துணைகள் ஏன் என் போன்ற ஏழைகளுக்கு மறுக்கப்படுகின்றன? ஒரு குலத்திற்கு ஒரு நீதி தருகின்ற நூல்கள் எல்லாம் பொசுக்கப்படவேண்டுமென்னும் கொள்கை வலுத்துள்ள இந்த நிலத்திலே இந்த அரசியல் நீதி முறைகள் மட்டும் நிலைத்திருக்கலாமா என்றெல்லாம் எண்ணி எண்ணி என் நெஞ்சம் புண்ணானேன்!

சிறையினின்று வெளிவந்தமை கருதி என் உள்ளம் இழந்த நல் உரிமையை எய்திவிட்டதாக எண்ணி

இன்பம் பெறவில்லை. அதற்குப் பதிலாக என் போன்ற ஏழைகள் நசுக்கப்படுவதை எண்ணிப் பெரிதும் துன்பம் கொண்டது. ஏழை தாழ்த்தப்பட வேண்டியவன் என்னும் கருத்து பணக்காரன் எண்ணத்திலே பிறந்து, ஏட்டிலே தவழ்ந்து, சட்டத்திலே நின்று நாட்டிலே நடமாடுகின்றது!

இதற்கு அரசியலார் உறுதுணை செய்கின்றபோழ்து ஏழைகளின் உள்ளம் பொங்கி எழாமல் எங்ஙனம் மங்கி இருக்க முடியும்? எத்தனை நாட்களுக்குத்தான் இக் கொடுமைகளை ஏழைகள் ஏற்றுக்கொண்டிருக்க முடியும்? அடாத செய்கின்ற அரசியலாரைப் படாத பாடுபடுத்த ஆற்றல் கொள்ளாதா ஏழைகளின் அறிவு நெஞ்சம்? ஏழைகள் விழித்தெழுகின்ற போழ்து எய்த்துப் பிழைக்கின்ற செல்வர்களின் நிலை என்ன ஆமோ என்பதனை எண்ணாமல் சிதறிய உளப்பண்பைப் பெற்றுள்ள பணக்காரர்களின் நிலை கண்டு சிறிது மனம் இளகினேன். யானைக்கு ஒரு காலம் வாய்த்தது போன்று பூனைக்கும் ஒரு காலம் வாய்க்காமலா போய்விடும் என்ற எண்ணம் எனக்கு அமைதியைத் தந்தது.

களைப்பு மிகுதி ஆக ஆக என்றால் நடக்கவே ஏலவில்லை. எண்பது வயதுக் கிழவன்போல் தள்ளாடித் தள்ளாடிக்கொண்டே நடந்தேன். கட்குடித்த பின்னர் ஆடிக்கொண்டு வருகின்றவனின் நடையைவிட என நடையில் உடல் அசைவுகள் அதிகம் காணப்பட்டன. மானத்தைக் காப்பாற்றிக் கொள்ளுதற்காய் மெதுவாகக் கால்களைச் சரட்டிக்கொண்டே நடந்து வந்தேன்.

சிறிது நடந்திருப்போம், மயக்கத்தின் அழுத்தத்தை என்னால் எதிர்த்துப் பொறுத்துக்கொள்ள இயலவில்லை.

நல்ல வேளையாக, இந்த நேரத்திலே என்னைப் போன்ற ஒரு ஏழை எனக்குப் பெரிதும் துணை செய்தான். தான் வைத்திருந்த கஞ்சியில் அரைப்பாகத்தை எனக்கு அளித்துக் களைப்பினை ஆறச் செய்தான். அவன் இன்றுவரை யாரென்று எனக்குத் தெரியாது போனாலும் இரக்கமுள்ள பெரியவன், என்பது மட்டும் தெரியாமல் போகவில்லை.

நான் அந்த ஆலமரத்தடியிலேயே அன்றெல்லாம் படுத்திருந்தேன். அப்புறம்...........!

அன்னம்

நான் எவரை நம்பி உயிர் வாழ்ந்து வந்தேனோ, நான் எவருடன் என் வாழ்நாளை எல்லாம் கழிக்க வேண்டுமென்று என் பெற்றோர்களின் கட்டுப்பாட்டிற்குக் கட்டுப்பட்டிருந்தேனோ அவர் என்னைத் தனியே விட்டு விட்டுச் சென்று விட்டார். சே! அவராகவா என்னைப் பிரிந்து சென்றார்? இந்தப் பாழும் உலகத்தில் வாழும் சில கயவர்கள் என்னைவிட்டு அவரைத் தனியே போகச் செய்து விட்டனர். அவரை இழந்த காரணம் ஒன்றினாலேயே நான் நடைப்பிணமாக வேண்டியிருக்கின்றது. என் வாழ்வு தாழ்வுற்றது.

நான் நல்ல கலை உடுத்து வெளியே நடமாடக் கூடாதென்று என் இனத்தவர்கள் எனக்கு இட்ட கட்டளை இன்றைய 144-ம் சட்டத்தைவிட மிக மிகக் கொடுமையானது. என்னினத்தவர்கள் நான் பூச்சூட்டத் திலகமிட லாயக்கற்றவள் என்று சொல்லி என்னை அழியச் செய்துவிட்டனர். கணவனைப் பறி கொடுத்தமையால், நான் பூவை என்ற நிலை மாறி பொம்மை என்ற நிலையிலே வாழவேண்டியிருக்கின்றது. பெற்ற பிள்ளையை விருப்பமற்ற முறையிலே பிரிய நேர்ந்தமை குறித்து, நினைந்து வாடுகின்றபோழ்து உற்ற கணவனையும் பறி கொடுக்க நேர்ந்துவிட்டது. இடிந்த வீட்டிலேயே மீண்டும் மீண்டும் இடிவிழுமாயின் எப்படியிருக்குமோ அவ்வீட்டின் நிலைமை, அப்படியிருந்தது என் நிலைமையும்!

இறைவன் துன்பம் துடைப்பவன், அல்லவா? கருணாமூர்த்தி என்பதும் அவன் பெயர்தானே? பின்னர் ஏன் எனக்குத் துன்பம் உற்றுழி உதவாமல் கருணை வழங்காமல் கண்ணை மூடிக்கொண்டிருக்கின்றான் இறைவன்? நான் அவனை நம்பி எத்துணையோ பொங்கல்கள் இட்டேனே அவற்றின் பயன் இதுதானா? அவ்வளவு பொங்கல் பூசைகளையும் ஏற்றுக்கொண்ட ஆண்டவன் செய்நன்றி கொன்று சேரின்னல் தருகின்றானே, அது முறையா?

அடுக்கிய இன்னல் பல அளித்த பின்னர் இன்பந் தருவோம் என்றெண்ணி இறைவன் என்மாட்டு விளையாடுகின்றானா? அன்றி இதுவரை ஆடிய திருவிளையாடல்கள் எல்லாம் போதாவென்று இன்னமும் விளையாட விரும்புகின்றானா? இந்த விளையாட்டுப் புத்தி அவனை விட்டு நீங்குமா? நீங்காதா? விளையாட்டு எல்லை கடந்து விட்டால் வினையாக முடியும் என்பது அவனுக்குத் தெரியாததொன்றா? பின்னர் ஏன் இன்னும் இந்த விளையாட்டு? இந்தக் காலத்திலே அவனது விளையாடல்களையெல்லாம் புராணமாகப் பாடப் புலவர்கள் கூட இல்லையே என்று நான் எண்ணினேன்.

"பனங்நூரில் நாங்கள் பணக்காரர்கள்தாம் என்றாலும், ஏனைய பணக்காரர்கள் போன்று, ஏழைகளிடத்தில் கொடுமையாகவோ, கடுமையாகவோ நடந்து கொள்ளுவதே இல்லையே! யாராயிருந்தாலும் அவர்கள் மாட்டு அன்புடன்தானே ஒழுகி வந்தோம்! நல்லவர்கள் என்ற பெயர்கூட எங்களுக்கு உண்டே! இப்படியெல்லாம் இருந்தும் என் கணவர், கொல்லப்பட வேண்

டிய காரணம் என்ன? கொல்லப்படுவதற்கேற்ற அவ்வளவு பெரிய பாதகத்தை நாங்கள் யாருக்கு விளைவித்து விட்டோம்? நாங்கள் அவ்வளவு வன்னெஞ்சக் கொடியவர்கள் அல்லவே!"

என்றெல்லாம் என் எண்ண அலைகளை என் உளக் கடலில் சிதற விட்டுக்கொண்டு இருக்கும்போழ்து மூன்று போலிஸ்காரர்கள் என் வீட்டிற்குள் நுழைந்தனர். நான் அவர்களை அணுகி, வரவேற்று, நாற்காலியில் இருக்கச் சொல்லி விட்டு, பதட்டப்படுகின்ற உள்ளத்துடன், 'ஏதேனும் என் பெண்ணினைப்பற்றிய துப்புக்கள் கிடைத்தனவா? அவள் உயிருடன் இருக்கின்றாளா? இல்லையா? என் கணவரைக் குத்திக் கொன்ற கொலைகாரன் யார்?' என்றெல்லாம் படபடவென்று ஒன்றன் பின் ஒன்றாகச் சில கேள்விகளைக் கேட்கத் துவங்கினேன். "பதட்டம் வேண்டாம். தங்கள் பெண்ணைப்பற்றியவை இன்னமும் விபரமாகத் தெரியவில்லை. தெரிந்தும் தெரிவிக்கின்றோம். ஆனால் இப்போது உங்கள் கணவரின் கொலைபற்றிய துப்புக்கள் எல்லாம் வெளியாகி விட்டன." என்று அவர்கள் சொன்னார்கள்.

பிரதாப முதலியாரும் அவரது மகனான அழகப்ப முதலியாருந்தான் இக்கொலைக்கு ஏற்பாடு செய்தவர்களாம். எங்கள் பெண்ணைத் தருவதாகக் கூறிப்பேசி முடித்துக்கொண்டு, பின்னர் நாங்கள் அவர்களை ஏமாற்றி அவர்களின் பெயருக்குப் பெரிய பொல்லாப் பினை உண்டாக்கி விட்டோமாம். இதுகாறும் புகழுடன் இருந்த அவர்கள் இன்று கிழானவர்கள் என்று ஏனைய மக்களின் ஏச்சிற்கு ஆளாகியமைக்கு நாங்கள்தான்

விக்கிட்ட விலையோர்களாம். அதனால் அவ்வவமானங்களைத் தாங்காமல் பழிக்குப்பழி வாங்க எண்ணி இருவரை ஏவிக் கொல்லச் செய்தனராம்.

மேலும் நாங்களே எங்கள் பெண்ணை ஒளித்து வைத்துக் கொண்டு, அழகப்பனுக்குக் கட்டிக் கொடுக்கக் கூடாது என்ற எண்ணத்தினால், எங்கள் மகள் ஓடிப் போய் விட்டாள் என்ற ஒரு பொய்க் கதையைக் கட்டி விட்டோமாம். இவற்றையெல்லாம் பொறுத்துக் கொள்ள இயலாமல் இக்கொலையைச் செய்ய அவர்கள் துணிந்தார்களாம்! இப்படியாகப் போலீஸார்கள் கூறி வந்தவற்றைக் கேட்டுக் காது, மனம் எல்லாம் புண்ணானேன்.

“எனவே இதற்கு நாம் செய்யவேண்டிய நடவடிக்கைகள் என்ன?” என்று நான் போலீஸ்காரர்களைக் கேட்டேன். அவர்கள் வழக்குத்தொடர வேண்டும் என்று முறைகளையும் விளக்கமாகச் சொல்லிவிட்டுச் சென்றனர். அவர்களை வழியனுப்பியதுடன் அவர்களுக்கு வழிச்செலவிற்குச் சிறிது பணமும் கொடுத்தேன்.

வழக்கு வெகு மும்முரமாக நடந்தது. நான்கு மாத காலம் இடைவிடாமல் ஒரே தொடர்ச்சியாக நடந்தது. இறுதியிலே அவர்களுக்கு ‘ஆயுள் தண்டனை’ தீர்ப்புக் கிடைத்தது. இத்தண்டனையைக் கேட்டவுடன் அவர்கள் உள்ளம் எவ்வளவுக்கெவ்வளவு துன்பமுற்றிருக்குமோ, அவ்வளவுக்கவ்வளவு என் உள்ளம் இன்பம் எய்திற்று. ஒருவர் துன்பமுறுவதினால் மற்றவர் இன்ப

முதல் இந்த உலகத்திலே இயற்கையாக நடக்கின்ற ஒன்றுதானே! நான் மட்டும் இவ்வியற்கை நியதிக்கு விதிவிலக்கா? என்ன?

ஆம்! அவர்கள் துன்பம் எனக்கு இன்பமாயிற்று. அடாது செய்தவர்கள் படாதபாடு பட்டுக் கெடாது இருக்க முடியுமா என்று என் வாய்க்குள்ளேயே நான் கேட்டுக் கொண்டேன். இவர்களுக்கு ஆயுள் தண்டனை என்பது அற்பத்தண்டனையேயாகும். தூக்குத் தண்டனைதான் சிறந்தது என்று நீதிபதியின் நிலையில் நின்று என் நெஞ்சம் பேசியது. நான் நீதிபதியாக இருந்திருந்தால் இவர்களைத் தூக்கு மேடையில் ஒவ்வொரு நாளும் ஏற்றி மும்மூன்று தடவை தூக்குக் கயிற்றை மாட்டி இழுக்கச் சொல்லுவேன்.

இங்ஙனம் இரத்தத்திற்கு இரத்தத்தைப் பெற வேண்டும் என்று எண்ணிக் குமுறுகின்ற என் நெஞ்சம் சிலபோழ்து இரக்கத்தால் இளகுவதும் உண்டு! இவர்களை வாட்டி வதைபுரிவதினால் என் கணவர் மீண்டும் உயிர் பெற்று விடுவாரா? பின் ஏன் நான் இவர்களை வாட்டி வதைப்பதிலே இன்பங்கொள்ள வேண்டும்? இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயஞ் செய்துவிடல் அன்றோ தமிழ்ப் பெண்ணாகிய எனக்கு அழகு?

இங்ஙனம் அவர்கள் மேல் எனக்குக் கோபமும் தாபமும் மாறி மாறி ஏற்படுவது இயல்பாகி விட்டது. எனது தனிமையை நினைக்கின்றபோழ்துதான் வெம்மை மிகுதிப்படும். வெம்மை மிகுதிப்படுகின்ற போழ்துதான்

எனது கோபமும் பொங்கி எழும். மனம் அறிந்து எவருக்கும் தீங்கிழைக்காத நான் இன்று மனம் நொடியும் அளவிற்குத் தீங்குற்றதேன்? ஊழ்வினைப் பயன் என்று உரைக்கலாம். அதாவது அதன் பொருள் நான் முற்பிறவியிலே செய்த தீவினைகளுக்காக இப்பிறவியிலே தீங்குறுகின்றேன் என்பதுதானே? மிக நல்லது. அப்படியென்றால் போன பிறவியிலே தீங்கிழைக்கின்றவளாக நான் பிறக்கவேண்டிய காரணம் என்ன? அது அதற்கு முந்திய பிறவியில் செய்த கேடுகளின் கடுதல்களினால் என்று சொல்லலாம். இப்படியாக அதற்கு முன் பிறவி, அதற்கு முன் பிறவி என்று அடுக்கிக் கொண்டே போனால், முதன் முதற் பிறவியில் அதாவது ஆண்டவன் என்னை ஆளாகப் பிறப்பித்த முன் பிறவியில் நான் செய்த பாவங்களிலே கொண்டு வந்து முடியும்! அந்தப் பிறவியிலே ஆண்டவன் ஏன் என்னைத் தீங்கிழைக்கின்ற உயிராகப் படைத்தான்? எனவே அதற்குக் குற்றவாளி நானல்லவே!

குங்குமத்தை மறந்த நெற்றி, எங்குமே செல்ல முடியாத உடல், வண்ண மலர்கள் சூட முடியாத கூந்தல், வண்ணச் சேலைகள் புனையக்கூடாத மேனி இவற்றுடனே வாழ்கின்ற வாழ்க்கை எனக்குக் கசப்பினைத் தந்தது எனினும் என் மகள் உயிருடன்தான் இருப்பாள் என்ற எண்ணம் எனக்குச் சிறிது இனிப்பையும் ஊட்டியது. அந்த எண்ணத்தின் பசுமையினால்தான் வெம்மையையும் ஏற்றுக்கொண்டு காய்ந்து சருகாக உதிராமல் இன்னும் உயிருடன் இருக்கின்றேன்.

பிறர்

இன்பத்தை எவர்தான் நெடுநாள் நுகர்ந்திருக்கின்றார்? இன்பமும் துன்பமும் பருவகாலங்கள் போன்று மாறி மாறி வரும் என்பதை எங்கள் வாழ்க்கையிலும் கண்டறிந்தோம். நாங்கள் இன்பமுடன் வாழ்ந்த காலமெல்லாம், மின்னல் போல் தோன்றி மறைந்தொழிந்து விட்டது. என் தந்தையின் படுகொலையைப் பற்றிப் பத்திரிகையில் படித்துக் காட்டிய என் காதலர், என் நிலை கண்டு மனம் பொறுமல் என்னை மெத்தையிலே படுத்துக்கொள்ளச் சொல்லிவிட்டு வெளியே சென்று வருவதாக மொழிந்து சென்றார். சென்றவர் சென்றவர்தான்.

அருங்கன்று பிரிந்துழலும் ஆப்போல, அவரைப் பிரிந்த நான் அலறுந முறையிலே அன்றெல்லாம் அழுது கொண்டிருந்தேன். வருவார், வருவார் என்று எண்ணிய என் நெஞ்சம், ஏமாற்றத்தால் ஏங்கியது. முதல் நாள், மறு நாள் என்று இருநாட்களையும் போக்கினேன் அவர் வருவார், எப்படியும் வந்து விடுவார் என்ற எண்ணத்துடன். வாட்டமுற்றேன் அவர் வராததால்! மூன்றும் நாட்காலையிலே, என் கணவரின் உயிருக்குயிராகிய தோழர் கண்ணுச்சாமி அவர்கள் வீட்டிற்குச் சென்று என் கணவரைப்பற்றி யாதேனும் தெரியுமா என்பதறிந்து வரலாம் என்று எண்ணி எழுந்தேன்.

அதே நேரத்தில் யாரோ கதவினைத் தட்டுகின்ற ஒலி கேட்டு, விரைந்து சென்று தாழ்ப்பாளைத் திறந்

தேன். நான் நினைத்துச் சென்றதோ என் கணவராக இருக்குமென்று! ஆனால் அங்கு நின்றதோ கண்ணுச் சாமி அவர்கள் ஆகும்! நான் யாரைத் தேடிக்கொண்டு வெளியே போகவேண்டும் என எண்ணி எழுந்தேனோ அவரே என் முன்னர் நிற்பது கண்டு மகிழ்ந்த என் நெஞ்சம், கதவினைத் தட்டியது கணவரல்லவே என ஏமாந்த நெஞ்சத்திற்கு ஆறுதல் அளித்தது!

நான் எந்த ஐயப்பாட்டினைத் தெளிவுபடுத்திக் கொள்ளவேண்டுமென்று துணிந்தேனோ அதனையே என்னிடம் தெரிந்துகொள்ளக் கண்ணுச்சாமி அவர்கள் காலையில் எழுந்ததும் என் வீட்டிற்கு வந்திருக்கின்றார் என்பது அறிந்து நான் பெரிதும் நைந்தேன் பெரிதும் நலிந்து. என்னிடத்திலும் சொல்லாமல், மற்ற தோழர் களிடமும் உரையாமல், அவர் எங்கே போய் இருப்பார் என்பது என் மனதைத் துன்புறுத்தும் கேள்வியாகியது.

அவர் எங்கே சென்றார்? எதற்காகச் சென்றார்? சென்றவர் யாரிடத்திலும் சொல்லாமல் செல்லுவானேன? போய் இரண்டு நாட்கள் ஆகிவிட்டனவே? என்பன போன்ற பல கேள்விகளை நான் அழுதுகொண்டே கேட்டேன். எனது பெருங்கலக்கத்தைக் கண்ட கண்ணுச் சாமி அவர்கள், அவரைப் போலீஸார் பிடித்துக் கொண்டு போய்விட்டனர் என்ற செய்தி ஊருக்குள் அடி படுகின்றது என்று ஒரு பெரிய போடு போட்டார். 'அதனால்தான் நம்மிடம் சொல்லாமல் போய்விட்டார் போலும்' என்று நான் அவர் கூறியதை ஏற்றுப் பேசினேன். இப்போது என் கலக்கம் இன்னும் சிறிது அதிகரித்தது. தேறுதல் தரும் என்ற நோக்குடன்

கண்ணுச்சாமி எனக்குத் தந்த செய்தி தேள் கொட்டிய வலியைத் தந்தது என்பதைத் தாயோ உணர்ந்து கொண்டார். அவர் 'ஊர்வாயை மூட உலைமூடி எங்கிருக்கின்றது? ஊர் நல்லதும் சொல்லும் கெட்டதுந் தான் சொல்லும். வேண்டாத மக்களாக இருந்தால் கெட்டவற்றையுந்தான் கட்டிவிடும். எனவே வருத்தப் படுவதில் பயனில்லை' என்று சொன்னார். நான் நாளை என் வீடுபோக விரும்புவதை அவரிடம் சொல்லி அவரையும் விபரங்கட்கு அடிக்கடி கடிதம் எழுதச் சொல்லி எங்கள் முகவரியைக் கொடுத்தேன். அவர் விடை பெற்றுச் சென்றார்.

இல்லாத ஒன்றை உள்ளதாகக் கூறுகின்றதற்குப் பொல்லாதது ஒன்றும் நாங்கள் செய்தோம் இல்லையே! பின்னர் ஏன் இப்பொய்ச் செய்தி எழுகின்றது? இதில் ஏதேனும் உண்மை இருக்கத்தான் வேண்டும் என எண்ணிப் புண்ணாகியது. அவ்வெண்ணத்துடன் தந்தையின் படுகொலையைப்பற்றி நினைவும் எழுகின்ற பொழுது எரிகின்ற தீயில் எண்ணெய் ஊற்றியதைப் போல என்னுடல் வெந்து, வெப்பத்தால் பொசுங்கியது. உடலின் வெப்ப மிகுதியினால் உள்ளம் தளர்ந்தது.

தாயை நாடி நாம் சென்றாலென்ன? தந்தையைப் பறிகொடுத்துத் தனிமையிலே வெம்மையினால் வருந்துகின்ற என் தாய்க்கு நான் அண்மையிலே இருப்பதினால் நன்மை ஏற்படுமன்றோ என்று பெற்ற தாயின் உற்ற துணையாக இருக்க என்னுளந் தவித்தது, என் கணவரைக் காணாது வருந்த நேரிட்டமையால்! உள்ளத்தின் தணியா விருப்பம் என்றன் உறுதியை மிகுதி செய்து

தாயை நாடிச் செல்லச் செயலிலே தூண்டியமையால் யான் என் பிறந்தகம் நோக்கிப் புறப்பட்டேன்!

நான் தாயை நாடிச் செல்லத் துணிந்த அன்று வியாழக்கிழமை ஆகும். வியாழக்கிழமைதோறும் எங்கள் ஊரிலே ஒரு பெருஞ்சந்தை கூடுவது வழக்கம். அந்தச் சந்தைக்குப் பல ஊர்களில் இருந்தும் மக்கள் பொருளை விற்பதற்கும் வாங்குவதற்குமாகக் கூடுவது உண்டு. என் தாய் வாரந்தவறினாலும் சந்தைக்குச் செல்லத் தவற மாட்டாள். எனவே நான் எப்பொழுதும் போல இப்பொழுதும் என் தாய் சந்தைக்குப் போயிருப்பாளோ என எண்ணி அந்த செல்வதைத் தள்ளிப்போடத் துணிந்தேன்.

என் கணவரைப் பிரிந்த மூன்று நாட்களில் மூன்று தடவைகள் தாயைக் காணப்போவதாக முடிவு செய்து, செயலிலே முனைந்து, பின்னர் தளர்ந்த உள்ளத்துடன் வெற்றிகரமாகப் பின் வாங்கியிருக்கின்றேன்! இப்பவும் அப்படிச் செய்ய என்னுள்ளம் விரும்பவில்லை. எனவே நாடி விரைந்து கொண்டிருந்தேன். எத்தனையோ எண்ண அலைகள் என்னுள்ளத்தை மோத வீட்டை நெருங்குவதற்குள்ளாக என் தாயைக் காண்பதுவும், அவளிடம் மன்னிப்புக் கோருவதுவும், அவள் என்னை ஏற்றுக் கொள்ளுவதுமாக எத்தனையோ காட்சிகள் என் உள்ளத்தில் தோன்றித் தோன்றி மறைந்து கொண்டிருந்தன.

ஊரை நெருங்க நெருங்க என்றன் உள்ளத் துடிப்புகளும் மிகுதிப்பட்டன. இறுதியில் உள்ளம் பதற, உடல் நடுங்க, வீட்டின் பின்புறத்தைச் சேர்ந்து விட்டேன்.

நான் வருகின்ற போழ்து வேற்றுடைக் கோலத்துடன் தான் வந்து கொண்டிருந்தேன். எந்த முறையைக் கை யாண்டு விட்டை விட்டு வெளியேறினேனே, அதே முறையைக் கையாண்டு மீண்டும் வீட்டிற்குள் நுழைந் தேன்!

அப்பொழுது தற்செயலாகச் சாணிதட்டிப்போடு வதற்காகச் சந்துப்புரத்தில் நுழைந்துவந்த எங்கள் வீட்டுச் சமையற்காரி நான் அங்கு நிற்பதைக்கண்ட வுடன் சிறிதுநேரம் என்னை உற்று நோக்கினாள். நான் யாரென்ற ஆராய்ச்சியிலே அவள் ஈடுபட்டிருக்கிறாள் என்பதனை அவள் முகம் உணர்த்திற்று. சிறிது நேரத் திற்குள் அவள் ஆராய்ச்சியிலே வெற்றிபெற்று விட்டாள் என்பதனையும் அவள் முகம் தெரியப்படுத் தியது. என்னை அவள் நன்கு தெரிந்து கொண்டாள் என்பதனை அறிந்து கொண்ட நான் அவள் பெயரைச் சொல்லி அழைக்க வாயெடுத்தேன். ஆனால் அதற்குள் ளாக அவள் முந்திக்கொண்டாள்.

'மீனு!' என்று அவள் வாயினின்றும் வெளிவந்து காற்றின் துணையால் நாற்றிசையும் பரவிய அந்த ஒரு சொல்லின் ஆற்றலை என்னென்றுரைப்பது? எங்கள் வீடு அந்த ஒரே ஒரு சொல்லில் எவ்வளவு அலறிற்று என் பதனை அறிகின்ற போழ்து நான் வியப்படையாமல் எங் ஙனம் இருக்க முடியும்? 'யார்? எந்த மீனு? நம்ம மீனுவா?' என்று ஒன்றன் பின் ஒன்றாக என் தாய் கேள்விக் குண்டு களை வீசிக்கொண்டே ஓடிவந்த போழ்து வழியில் அவள் கால்களின் உதைகளைப் பெற்ற பாத்திரங்கள் எத்துணை எத்துணையோ? அடுப்படியில் உதைபட்ட வெண்கலத்

பின் ஓசை, நடுவீட்டில் உதைபட்ட வெள்ளிப்போகணி யின் ஓசையை மீறி எழுந்தொலித்தது என்றால் கேட் பாயோ?

இப்படியாக அன்று எங்கள் வீடு அல்லோல கல் லோலப்பட என் தாய் பின் கதவு வழியாக வீட்டினின்று வெளியே வீதியை நோக்கி வந்து கொண்டிருந்தாள். நான் வீதியினின்று வெளியே வீட்டிற்குள் முன்னேறிக் கொண்டிருந்தேன். எனவே இருவரும் இடைவெளியி லேயே ஒருவரை ஒருவர் கண்டோம். இருவர் கண்களும் பெரியன. பெரிய கண்கள் பிதுபிதுவெனக் கண்ணீர்த் துளிகளைச் சிந்தின. ஓடி வந்த என் தாய் ஒன்றும் பேச முடியாத நிலையிலே என்னை ஒட்டி ஒரே தழுவலாகத் தழுவிக்கொண்டாள்!

கள்மருங்கில் எழுந்து என்றும் ஓர் துளிவரக்காணு நன் மருந்து போன்ற என் தாய் என்னைக்காணுததாலும் கணவரை இழந்ததாலும் மென்மருங்குல்போல் வெறுள அங்கமும் மெலிந்து நலனற உணங்கினுள். நான் வீடு வந்த பின்னரோ, கண்டதால் உவகை பூத்துக் கருத் திலே வன்மை பூண்டு, தூண்டவுந்துள்ளுகின்ற தூய நற்சுடரைப்போல, மேலும் மேலும் இன்பங்கொண்டாள். மேனியுந் தன் மெலிவகற்றிப் பூரிப்பெய்திற்று!

இதிலிருந்து எனது வாழ்க்கை வரலாற்றிலே புதிய பகுதி துவங்குகின்றது என்று கூறுவது மிகமிகப் பொருத்தமாகும். நாளடைவில் எனது வரலாற்றின் விரிவுகள் அத்துணையும் என் தாயினிடம் சொல்லிவிட் டேன். என் தாயும் நான் பிரிந்ததிலிருந்து அவள் உற்ற

இன்னல்களை எல்லாம் ஒன்றுவிடாமல் உரைத்து விட்டாள். இம்மாற்று முறையினால் இருவர் உள்ளமும் ஒன்றெனக் கலந்தது.

முருகர்-என்னுளங் கவர்ந்தெழுந்து ஓங்கிய பெரியார், கழுத்துக் கயிற்றினால் (தாலி கட்டியதால்) என் உடலுக்கும் அன்புக் கயிற்றினால் என் உயிருக்கும் உரியவராகி விட்டார் என்பதை என் தாய் நன்கு உணரும்படி செய்து விட்டேன். என் காதலர் இன்னாரென்பதை இம்மியும் பிறழாமல் அறிந்துகொண்ட என் தாய், நான் வியக்கும் படி செய்தி ஒன்று சொன்னாள். அதுதான் முருகர் எனது அம்மான் மகன் என்பது! மிகவும் எட்டிய உறவு முறை அது.

'முருகரை அன்றி வேறெருருவரையும் நாடேன்' என்ற உனது உரிமை எத்தகைய தடையுமின்றி என் வீட்டு அவையில் வெற்றியுடன் நிறைவேறி விட்டதினால் முருகரைத் தேடுகின்ற பணியிலே நானும் என் தாயும் தீவிரமாக ஈடுபட்டோம். (இதே முடிவு என் தந்தையார் காலத்திலே வெற்றி பெருது தோல்வியுற்றதை நினைவூட்டுகின்றேன்!) கருத்தொருமித்து ஆதரவுபட்ட காதலருடன் அன்பு வாழ்வு துவங்கலாம் எனும் விடுதலை விண்ணப்பங் கண்டு நான் விள்ளரிய இன்பங் கொண்டேன். காதரைப் பிரிந்த நிலையிலே காதல் வாழ்வின் இன்ப நுகர்ச்சிகளைப்பற்றி நான் கண்ட கனவுகளுக்குக் கணக்கு வழக்குக் கிடையாது!

கண்ணுச்சாமி அவர்களுக்குக் கடிதத்திற்கு மேல் கடிதம் எழுதிய வண்ணமாகவே இருந்தேன், என் கனா

வரைப் பற்றிய தகவல் ஏதேனும் தெரிய வருகின்றதா என்று! அவர் எழுதிய பதில் கடிதங்கள் பலவற்றிலும் என் கணவர் எங்கள் ஊரில் (காட்டூரில்) எழுந்த நாட்டார் நகரத்தார் சண்டையின் மூலம் விளைந்த தீவிபத்தில் கலந்து கொண்டார் என எண்ணப்பட்டமையால் போலீஸாரால் கைது செய்யப்பட்டார் என்ற செய்தியை வலியுறுத்திக்கொண்டே இருந்தார்.

காட்டூரின் மக்கள் எண்ணிக்கை ஏறத்தாழ நானூறு இருக்கும் என எண்ணுகிறேன். இந்த நானூறு பேர்களில் சரிபாதி அதாவது இருநூறு மக்கள் நகரத்தார் என்று அழைக்கப் பெறுவர். இவர்கள் அனைவரும் நாட்டுக்கோட்டைச் செட்டியார்களாகும். மற்றைய இருநூறு மக்களின் எண்ணிக்கையிலே கள்ளரும், ஏனைய வகுப்பினரும் அமைவர். இவர்கள் நாட்டார்கள் என்று அழைக்கப் பெறுவர், செட்டியார்கள் பண பலம் பெற்றிருப்பது ஒப்ப, நாட்டார்கள் கைப்பலம் மிக்கவர்கள். எப்பொழுதும் இவ்விரு திறத்தாரிடையேயும் போர்த்தீ புகைந்து கொண்டே இருந்தது.' உலகத்தியற்கையை ஒட்டி! பணபலத்தால் கைப்பலம் உடைய பகுதியினரை அமுக்கவேண்டுமென்ற எண்ணம் எண்ணெய் ஊற்றிய எரிபோல வளர்ந்து வந்தது செட்டியார்களின் எண்ணத்திலே! கைப்பலத்தினால் செட்டியார்களின் பண பலத்தை ஒடுக்க வேண்டும் என்ற எண்ணம்; கிளைகள் பரப்பி ஆணித்தரமாக வளர்ந்து வந்தது கள்ளர்களின் கருத்திலே!

இதுகாறும் புகைந்து கொண்டிருந்த போர்த்தீ இப்போது பிடித்தெரியத் துவங்கியது. இருகட்சியாரும்

செயலிலே இறங்கிவிட்டனர், எதன் வலிமை பெரிதென்று தெரிந்து கொள்ள! இவ்விரு மாறுபட்ட மனத்தாரையும் மகத்தான புரட்சிப் பாதையிலே கொண்டுவந்து நிறுத்திய பெருமை காட்டூர்க் காளி அம்மனுக்குத் தான் உண்டு. காளி கோயிலின் பூச்சொரி விழாவிலே, எந்தக் கட்சியாருடைய பூ முதன் முதலில் சொரியப்படவேண்டும் என்ற கேள்வி எழவே, நகரத்தார் 'எங்களுடையது' என்று உரைத்தனர். நாட்டார்கள் எங்களுடைய பூக்களுக்குத் தான் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும் என்று கங்கணம் கட்டியதுடன் கச்சையைக் கட்டினர் இறுக! செட்டியார்கள் சித்தங்கலங்கினராய்ச் சத்தம் போடாமல் பின் வாங்கினர், கச்சேரியிலே காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவோம் என்ற வீர உணர்ச்சியோடு!

மெதுவாகப் பூச்சொரி விழா நடக்க வேண்டிய சந்நிதியிலே கல்சொரி விழா நடக்கத் துவங்கியது! சிலருக்குக் காயம் சிலருக்கு அபாயம்! காயம்பட்டவரின் தொகை, கரந்தொளித்து வீசிய நகரத்தார்களின் கல் வீச்சினுல் நாட்டாரின் பக்கம் அதிகரித்தது. எனவே நகரத்தாரின் வீடுகள் பல தீக்கடவுளுக்கு அர்ப்பணம் ஆக்கப்பட்டன, நாட்டாரின் திருமுயற்சிகளினுல்! அன்றுதான் என் கணவர் என் தந்தையைப்பற்றிய கொலை விபரத்தைப் படித்துச் சொல்லிவிட்டு வெளியே சென்றது! வெளியே சென்றவர் கலகத்திற்கு வித்திட்டவர் எனக் கருதப்பட்டமையால் கைதியாக்கப்பட்டார்.

இந்த விபரங்களை நான் கண்ணுச்சாமி அவர்களுடன் வைத்துக்கொண்ட கடிதப் போக்குவரத்தின் துணையினுல் அறிந்துகொண்டேன். என் கணவர் நாட்டாரை

யும் நகரத்தாரையும் ஒத்துவாழச் செய்ய எவ்வளவோ முயன்றும் முடியாத காரணம் ஒன்றினாலேயே இருதிறத்தாரும் தனித்தனியே பிரிந்து வாழ்வதேதான் நல்லது எனச் சதாச் சாற்றிவந்தவருள் தலையாயவராவர். "ஒத்து வாழ முடியாத நிலையில் செத்து மடிவதைவிட மெத்தச் சிறந்தது பிரிந்து வாழ்வதுதான்" என்பது அவருடைய அசைக்க முடியாத அனுபவம். எப்படி வடநாட்டாருடன் தென்னாட்டவர்கள் ஒத்துவாழ முடியாதோ அப்படித்தான் காட்டுரைப் பொறுத்தவரையில் நாட்டாரும், நகரத்தாரும் ஒத்துவாழ முடியாது என்பதுவும் என்னும் இந்த உண்மையினை அவர் உரைத்து அதற்காக உழைத்து வந்தமையால், ஒழுங்கற்றவன் ஒன்றுமறியாதவன் என்ற பெயர்கள் பெற்றதுடன் கலகக்காரன் என்று கைதியாகவும் கைப்பற்றப்பட்டார். இதுதான் உண்மையை உரைத்தவனுக்கு உலகம் தருகின்ற முதற் பரிசிலாகும்!

கண்ணுச்சாமி அவர்களுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் என் கணவர் எந்த ஊர்ச்சிறையிலே அடைக்கப் பெற்றுள்ளார் என்று எழுதிக் கேட்டிருந்தேன். அவர்கள் அதற்கு பதில் எழுதுகையில் பாங்களூர்ச் சிறையிலே பதுக்கி வைத்திருப்பதாக வதந்தி உலவுகின்றது என்று குறிப்பிட்டிருந்தார். இதற்குமேல் பாங்களூர் சென்று விசாரித்ததில், அவரை நிரபராதி என்று அரசியலார் விரட்டி விட்டதாகத் தெரிந்துகொண்டேன்.

விடுதலை செய்யப்பட்டவர்-சேச்சே-விரட்டி அடிக்கப்பட்டவர் வீட்டிற்கும் போகாமல், வெளியுலகிலே எங்கே திரிகின்றார் என்பதறிய என்னுளமும் உயிரும் துடியாய்த் துடித்தன. கண்ணுச்சாமி அவர்கட்கு இவற்றை

யெல்லாம் தெரிவித்து அவரைக் கண்டுபிடிக்கிற பணியிலேயே பெரிதும் ஈடுபட வேண்டுமெனக் கேட்டுக் கொண்டேன், அவர் உடன்பாடு ஆறுதல் உண்டு பண்ணியது!

இந்தனை நாட்களாக ஓடி ஒளிந்து வாழ்ந்த நான் ஊர்வந்து சேர்ந்து விட்டேன் என்பதாக ஊருக்குள் பேச்சு அடிபடவே, ஒவ்வொருவராக என்னைக்கண்டு போக, என் வீடு வந்து வந்து சென்றனர். வந்தவர்களை வரவேற்று, எனது வரலாற்றைக் கூறிமுடித்து அனுப்பு வதற்குள் ஏன் நான் வீட்டிற்குத் திரும்பி வந்தேன் என்று ஆகிவிட்டது! போலிஸார் கூட ஒவ்வொருவராக எங்கள் வீட்டிற்கு வந்து போயினர். அவர்களிடம் நான் ஓடிச்சென்றதையும் ஒளிந்து வாழ்ந்ததையும் ஒன்று விடாமல் உரைத்தேன், அவர்கள் வியந்தனர். 'ஆ' என்ற பெருமூச்சை வெளிவிட்டுக்கொண்டே!

'எப்போ வருவார் என்றன் கலிதீர'! என்ற எனது பாட்டிற்கு 'இப்போ வந்து விடுவார்' என்று என் தாய் பின் பாட்டுப் பாடினாள். இப்படியாகச் சிலகாலம் எங்கள் வாழ்வுத்தேர் உருண்டது.

கல்லறைச்சாமி

"வாழ்க்கை என்பது ஒருபெரும் போராட்டம். வாழ்க்கை என்பது ஒரு பெரும் துன்பக்கேணி." என்றெல்லாம் பொல்லாத பொருள் ஒன்றுடன் 'பெரும்' என்ற பெரும் அடைமொழி ஒன்றைச் சேர்த்து, வாழ்க்கையைப் பற்றி இகழ்ந்து பேசுவது நம்மவரிடையே வழக்கமாகப் போய் விட்டதல்லவா! எங்கேயெனும் வாழ்க்கையைப் பற்றிப் பேச்சுக் கிளம்புமாயின் நம்நாட்டைப் பொறுத்த வரையிலே நான் துணிந்து கூறுகின்றேன், அங்கு வாழ்க்கையைப் பற்றிப் பேசுகின்றவர்கள் இழிவான முறையிலே தான் தங்களின் கருத்துக்களைப் பரிமாறிக் கொள்ளுவார்கள் என்று! பகலில் எல்லாம் பணப்பஞ்சம் வாட்டவும், இரவெல்லாம் மனச்சஞ்சலம் கொல்லவும் படாதபாடு படுகின்ற மக்கள் எங்ஙனம் வாழ்வை வளம் நிறைந்த இன்ப ஊற்று என்று ஒப்புக் கொள்ளுவார்கள்? தாங்கள் உறுகின்ற துன்ப இன்பங்களுக்கெல்லாம் தாங்கள் காரண கர்த்தாக்கள் இல்லை என்று மறுப்பவர்கள் எங்ஙனம் பகுத்துணர்ந்து முன்னேறப் போகின்றார்களோ தெரியவில்லை! வாட்டுகின்ற கவலைகளினால் வாழ்க்கை இடுக்கண் நிறைந்தது, பொல்லாதது, துன்ப ஊற்று என்று அவர்கள் கருதுகின்றார்கள். இது இயற்கை தானோ?

வாழ்வு முள்ளுள்ள நெறி என்ற பொல்லாத குறி மக்களின் உள்ளத்திலே ஆழமாகப் பதிந்து விட்டதால் முள்ளின் வலி வேதனையை வாழ்விலே நாள் தோறும்

உணர்ந்து நலிகின்றார்கள் அவர்கள். வாழ்வு முள்ளுள்ள ரோஜா அல்ல, முள்ளால் போர்த்தப்பட்ட பலா என்று ஒரு அறிஞன் கூறுகின்றான். அது மிகமிக உண்மையான மொழியே யாகும். முட்களை மெதுவாகக் களைந்து சக்கை களை ஒவ்வொன்றாக ஒதுக்கிவிட்டு, பழத்தை அறுப்பீர்களாயின் அதற்குள்ளே உங்கள் பொங்கும் ஆசைக்கேற்ற தங்கச் சுளைகளைக் காண்பீர்கள். இவ்வுண்மையை உணராமல் 'காயமே இது பொய்யடா வெறுங் காற்றடைத்த பையடா' என்று ஆகாத தத்துவங்களைப் பேசிப் பயன் என்ன? இங்ஙனம் ஆகாத கருத்துக்களை மக்கள் சமுதாயத்தினிடையே பரப்பி, மக்களைக் கெடுப்பதுடன் தாங்களும் கெட்டொழிகின்றார்கள் அவ் வேதாந்திகள்!

"ஆறிலும் சாவு, நூறிலுஞ் சாவு" என்ற எண்ணமும், "செய்வினை, பழவினை" என்னும் செம்மையற்ற குறிக்கோட்பாடுகளும், "தலையெழுத்து, தம்பிரான் புண்ணியம், ஆண்டவன் விட்டவழி" போன்ற பொருளற்ற நம்பிக்கைகளும், மக்களைக் கோழைகளாக்கி, உழைத்துண்ணும் பிழைப்பையும் பாழ்படுத்தி வழியற்ற வறிஞர்களாகச் செய்கின்றன.

"ஆறிலுஞ் சாவு நூறிலுஞ் சாவு" என்பதுணர்ந்த இளைஞன், தனது ஆறாவது வயதிலேயே, குடி, கொலை முதலிய கொடிய செயல்களிலே தலையிடத்துணிகின்றான் அச்சம் என்பது துளியுமின்றி! அவனை நல்வழிப் படுத்தி நல்லவனாக்க விரும்பி நாம் அவனுக்கு நயவுரைகள் பகர விரும்புவோமாயின், 'நான் எப்பவும் சாகப் பிறந்தவன் தானே? இன்று சாகின்றேன். இல்லையென்றால் இன்னும் ஏழெட்டு ஆண்டுகள் ஆனபின்னர்ச் சாகின்றேன். அப்

பாடச் சாகும் போழ்து குடித்துச் செத்தாலென்ன? கொலைசெய்து செத்தா லென்ன?' என்று நம்முடன் வாதஞ் செய்யக் கிளம்பிவிடுகின்றான். நாமும் அவனைச் சிறிது நேரம் நிறுத்தி, அவனது வாதங்களுக்கு எல்லாம் எதிர் வாதஞ் செய்யத் துவங்குவோமாயின், 'தூங்கும் போது வாங்குகின்ற மூச்சு. அது—சுழிமாறிப் போனாலுமே போச்சு' என்று ஒரு பெரும் போடு போடுவான், நாம் மூக்கின்மேல் விரலை வைத்துத் திகைக்கும்படியாக!

"செய்வினை, பழவினை" போன்ற செம்மை யிலாக் கொள்கைகளாலால் பிணைக்கப்பட்ட பேதைகள், இன்பம் வந்துற்ற போழ்தும், இன்னல் வந்துற்ற போழ்தும் இவை எல்லாம செய்வினைகளின் பயன்களென்று கூறுவதுடன் அமையாமல், ஏழைகளுக்கு ஏற்ற துணைகள் புரியாது, அது அவரவர்கள் செய்வினைகளின பயன்களென்று காரி உமிழவுஞ் செய்வார்கள். இவர்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள தொடர்பு எணி வைத்தாலும் எட்டாத அளவிற்கு விரிந்துவிடும். செய்வினைகள் அவரவர்களை ஆளட்டும் என்ற நினைவே இதற்கு அடிப்படையாகும்!

தலையெழுத்து, தம்பிரான் புண்ணியம், ஆண்டவன் விட்டவழி என்ற ஆகாத கொள்கைகளில் ஆழ்ந்த உறுதி வைத்திருப்பவர்கள், எல்லாம் அவன் விட்டபடி நடக்கும் என எண்ணி வாழ்விலே முன்னேற்றங் காண மாட்டார்கள்; காண விழையவும் மாட்டார்கள்! இவர்கள் எந்த நிலையிலே பிறந்தார்களோ, அதே நிலையிலே அழிகிறார்கள்!

இப்படியாக அறிவிற் கொவ்வாத செறிவற்ற குறிக்கோள்களில் கண்ணும் கருத்துமாய் இருப்பவர்கள் தங்கள் வாழ்வைத் தாங்களே பாழாக்கிக் கொண்டு தறுதலைகளாய் வாழ்கின்றனர். இவர்கள் தாம் பழத்தின் தோலை உரித்தல்லவோ உள்ளுக்குள் இருக்கும் உயர் கனியைத் தின்ன வேண்டும் என மலைத்து, வாழைப் பழத்தையே வெறுக்கும் கிறுக்குப் புத்தியை உடையவர்களின் கூட்டத்தை அதிகமாக்குபவர்கள் ஆவார்கள்! இத்தகையோரைக் கண்டு நாம் சிரிப்பதா அன்றி அழுவதா என்று விளங்கவில்லை. ஆம்! இவர்களைக் கண்டு நாம் எது வேண்டுமாயினும் செய்யலாம். ஏனெனின் அவர்களின் போக்கு நமது சிரிப்பிற்கும் அழுகைக்கும் உரியதாகத் தான் அமைந்திருக்கின்றது!

இங்ஙனமாக வாழ்வின் போக்கறியாத மாக்களைக் குறித்துத் தாக்குதல் கொண்டு என் எண்ணம் சிதறியது. போக்கற்றவர்களின் கும்பலிலே முருகனும் புகுந்து விட்டானே? பின்னர் ஏன் "பிரபாதி" என்று சிந்தனைச் சிறையினின்று நீங்கிய முருகன் இன்னும் வீடு வரவில்லை? வாழ்வின் கொடுமை, தற்கொலை என்னும் மடமையை அவனுக்கு நினைவூட்டியதால் இல்லத்தையும், இனியாளையும் மறந்தானோ என்ற எண்ணங்கள் கூட என்னுள்ளத்திலே இடம் பெற்றன.

வந்தணையும் இன்பத்தை வரவேற்கின்ற மக்கள் வாட்டுகின்ற துன்பத்தை மட்டும் வெறுப்பானேன்? வெறுப்பதுடன் உருக்குலைவையும் ஏன் அவர்கள் ஏற்றுக் கொள்ளுகின்றார்கள்? தற்கொலை புரிந்து கொள்ளுதலின் மூலம் தப்பித்துக் கொள்ளலாம் என்று தவறுதலாக

என்றெனி அதன் வாய் வீழ்பவர்கள் தங்களின் பரம்பரைக்கு அழியாத பழியை உண்டு பண்ணுபவர்கள் ஆவார்கள். அவ்வினைத்தார் அவனை கொன்று புரந்ததினால் எய்தும் பயன் இதுதானா? இங்ஙனம் வாழ்வை வெறுத்துத் தற் கொலை புரிந்தவர்களின் பெயர் ஏட்டிலே, முருகனும் தன் பெயரைச் சேர்த்து விட்டானே என்பதை எண்ணு கின்ற பொழுது என் நெஞ்சம நெக்கு நெக்கு உருகிய துடன், நெடுவேல்கள் பாய்ந்த வலியையும் ஏற்றுத் துன் புற்றது!

முருகனுடன் நான் உடன் பிறக்கும் பேறு பெறவில் லையே அல்லாமல் செயல் முறைகள் அனைத்திலும் நாங் கள் இருவரும் ஒன்றெனவே ஒழுகிவந்தோம். உள்ளத் திலே தான் எண்ணுகின்ற அனைத்தையும் கள்ளங் கபட மற்ற முறையிலே ஒன்று விடாமலும், சிறியனவற்றைப் பெரியனவாகவும், பெரியனவற்றைச் சிறியனவாகவும் கூட்டிக் குறையாமலும் என்னிடத்தில் முருகன் சொல்லி விடுவான். நானும் அடுத்தது காட்டும் பளிங்கு போல உள்ளம் நினைத்தவற்றை யெல்லாம் முருகனிடத்தில் சொல்லிவிடுவேன்.

நான் ஓர் வளர்ப்புப் பிள்ளை என்றும், என் தந்தை தாயர் யாரோ எனக்கே தெரியாதென்றும், நான் வயிற் றுக் கொடுமையினால் என்பெற்றோர்களால் விலை பேசப் பட்ட அநாதை என்றும் சொல்லும் போழ்து, அவன் "அதற்காக என்ன செய்வது? உன் பெற்றோர்கள் வாழ் வின் நீர்மை தெரியாது வாழ்ந்து வந்தமைதான் அவ்வள விற்கும் அடிப்படை என்றும், உன் பெற்றோர்களின் வயிற்றுக் கொடுமையைப் போக்குதற்காக, உன்னை

விற்று அக்கொடுமையைப் போக்கிக் கொண்டார்கள் அல்லவா? அதுவரை நீ தந்தைக்காற்றும் உதவியைச் செய்துவிட்டவன் தானே?' என்றும் பலவாறுகச் சொல்லி ஆறுதல் சொல்வான். அவற்றை எல்லாம் நான் எண்ணி, இழந்த நல் இன்பம் இனியும் பெறுவோமா என்று ஏங்கிக் கொண்டேன்.

இங்ஙனம் நெருங்கிப் பழகிய நாங்கள் இப்போது பிரிந்து வாடுகின்றேமே என்பதுணரும் போழ்துதான் வாழ்விலே வெறுப்புத் தோன்றுகிறது; இந்த வெறுப்பின் காரணமாக நான் தற்கொலை செய்துகொள்ள மாட்டேன்; 'வாழ்வாவது மாயம், மண்ணாவது திண்ணம்'' என்று வெட்டி வேதாந்தம் பேசமாட்டேன். வாழ்விலே இன்பந் தோன்றுமளவும வாட்டத்தைப் பொறுமையுடன் ஏற்றுக் கொண்டுதான் இருப்பேன். வாழ்வு என்ற இலக்கியத்திற்கு இலக்கணம் கூறவேண்டுமாயின் சகிப்புத் தன்மையுடன் சஞ்சலங்களை ஏற்று மகிழ்ச்சியாக இருப்பதுதான் என்ற முதல் சூத்திரத்தைச் சொல்லலாம்!

நான் முருகனின் நெருங்கிய உயருக்குயிராய தோழன் என்ற முறையில் எங்களூர் அஞ்சல் நிலையத் தலைவர் முருகனுக்கு வருகின்ற கடிதங்களை எல்லாம் என்னிடமே தரத்தொடங்கினர்; நானும் வாங்கி வாங்கி வைத்துக் கொண்டேன், முருகன் வந்த பின்னர் கொடுத்துவிடலாம் என்ற எண்ணத்துடன்! எதிர்பாரா முறையில் அவன் தந்தையிடமிருந்து இரண்டு கடிதங்கள் ஒன்றை அடுத்து ஒன்றுக வந்து சேர்ந்தன. சினக்காரியுடன் சிக்கிக்கொண்ட வேலப்ப முதலியார், முருகனின் தந்தை ஏன் இரண்டு கடிதங்களை இத்துணை நாட்கள் கழித்து

எழுதிக்கொண்டிருக்கின்றார் என்று ஐயங்கொண்ட நான் அவ்விரு கடிதங்களில் முதலில் வந்த கடிதத்தை உடைத்துப் பார்த்தேன்!

எனது எண்ணம் சிறிது பயமடைந்தது முதலில், வேற்றவரின் கடிதத்தை பிரித்துப் படிப்பதற்கு! ஆனால் தந்தையிடமிருந்து மகனுக்கு நெடு நாட்கள் கழித்து கடிதம் வருவதின் கருத்தை அறிய விழைந்த மனம், பயத்தை ஒழித்துப் படிக்கத் தூண்டியது! மனத் திடத்துடன் கனத்த கடிதத்தைப் பிரித்துப் பார்த்தேன். அதிலே அவனது தந்தையின் வரலாற்றின் சுருக்கம் வரையப்பட்டிருந்தது, அவற்றைப் படித்துணர்ந்த சிந்தை ஒருபுறம் உவகையையும், மறுபுறம் வருத்தத்தையும் தந்தது. அது வருமாறு:

" அன்புள்ள மகனுக்கு,

அருமைத் தந்தை எழுதிக் கொண்டது. இங்கு அனைவரும் நலமே. உங்களுடைய நிலைமைபற்றி அறியப் பெரிதும் ஆவலுடன் இருக்கின்றேன். உன் தாயின் சாவு கேட்டுப் பெரிதும் வருந்தினேன். என் கவலையே அவளுக்குச் சாவினை அளித்திருக்கும் என்பதுணர்ந்து பெரிதும் கவல்கின்றேன், நடந்தன நடந்தனதான். இனி அவற்றையெல்லாம் எண்ணிக்கொண்டே இருப்போமாயின் நாமும் அவன் சென்ற வழியைப் பின்பற்றத்தான் நேரிடும். மனிதன் கவலைகளை நினைந்து நினைந்து கருத்தழிவானாயின் அவனைக் கவலைகளே, சதிகாரனாக மாறி மாய்த்துவிடும். எனவே அதுபற்றி நீள எழுதி உன்னைக் கவலைப்படுத்தவோ அல்லது எனது கவலையைத் தெரிவித்துக் கொள்ளவோ நான் விரும்பவில்லை!

ஏது என் கடிதம் புதுமையாக அன்றோ இருக்கின்றது என்று எண்ணுகின்ருயா? ஆம்! மனிதனின் மனம் நிலையற்றது; நின்று நின்று தாவுந்தன்மையது! இங்ஙனம் எழுதுதற்குக் காரணமும் மனமாற்றந்தான்! 'ஊர்வர மனமில்லை. ஊர் வருவேன் என்பதை அறவே மறந்து விடு' என்றெல்லாம் மிகக்கொடுமையாக எழுதிய எனது மடமையைக் குறித்துப் பெரிதும் வெட்கங் கொள்ளுகிறேன். அன்று நீ என்மேல் அடங்கா வெகுளி பூண்டிருப்பாய் என்றே எண்ணுகின்றேன். அவற்றையெலாம் நீ இன்று தணித்துக்கொள்ள வேண்டும் என்னும் எண்ணத்தினுல்தான் நான் இக்கடிதத்தை எழுதுகின்றேன். எனவே நீ இக்கடிதத்தைப் படித்த பின்னர் கருத்திலே அமைதி கொள்வாய் என நம்புகிறேன்.

நீ சிறந்த அறிவாளி. உனக்குச் செறிந்த அறிவு உண்டு என்பதையெலாம் இப்போது என்னுல் மறுக்க இயலவில்லை! நீ எனக்கு எழுதியது போல நான் சினக்காரியையும் உடன் அழைத்துக்கொண்டு ஊர் வந்திருப்பேனுயின், நான் இவ்வளவு துன்பங்களுக்கு உள்ளாக நேர்ந்திருக்காது; நானும் வீணுக மனம் ஓடிய வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்காது! ஊரிலே 'இரண்டு பெண்டாட்டிக்காரன் என்ற பெயர் ஏற்படும். அந்தப் பெயருடனுவது அமைதியாக வாழ்ந்திருக்கலாம். விவேகமுள்ள உனது அறிவுரையை அன்று வெறுத்துத் தள்ளிவிட்டு இன்று அவதிப்படுகின்றேன்.

இதனை எனது விதியென்று ஊரார் சொல்லாம். அறிவுடையோர்கள் 'அறியாமை' என்று சொல்லுவதை அறிவில்லாதவர்கள் 'விதி' என்று வீண் பெயரிட்டு

அழைக்கின்றனர், அவ்வளவுதான். எனவே நான் உற்ற இன்னல்கள் எல்லாம் அறியாமையால் நேர்ந்தவை என்று அமைதி கொள்ளுவேனே அல்லாமல் 'விதி' என்று சொல்லி விம்மி அழமாட்டேன்.

வட்டிக் கடையில் கிடைத்த கொள்ளை லாபம் வீடு செல்ல வேண்டுமென்றும் விருப்பத்தை விரட்டித் தட்டிக் கழித்துவிட்டது. பேராசை கொண்டமையான் பெரு நட்டமும் உற்றேன். பேராசை பெரு நட்டந்தானே? நான் எப்படிச் சீனக்காரியின் வலையிலே சிக்கினேனென்று நீ சிந்திக்கலாம். உன் சிந்தனைச் செல்வத்தை வீணாகச் செலவிடாதே. இதோ அந்தக் கதையைச் சொல்லுகின்றேன், கேள். நீ என்னுடைய பிள்ளை என்ற முறையிலே, என் உள்ளத்தைத் திறந்துகாட்டுகின்றேன். அங்ஙனம் காட்டுகின்ற என் உள்ளத்திலே, ஏதேனுங் களங்கம் காண்பாய் ஆயின் அவற்றை உனது காட்சித் திறத்தினால் கழித்துத் தள்ளிவிட்டுக் கருத்துக்களை மட்டும் ஏற்றுக்கொள்.

இங்கு நமக்கொரு வட்டிக்கடை உண்டு என்பது உனக்குத் தெரியுமல்லவா? அந்த வட்டிக்கடையில் சீனர் ஏராளமாக வந்து வந்து தவணைக்காகவும், அடகுக்காகவும் பணம் பெற்றுச் செல்லுவது வழக்கம். நான் சிறிது குறைந்த வட்டிக்குக் கடன் கொடுத்து வந்தமையால் நமது கடையிலே எப்பவுமே கூட்டம் அதிகமாக இருக்கும், இந்தக் கும்பல் நிறைந்த கூட்டத்திலே மிகவுங் குறிப்பிடத் தக்கவர் ஒரு சீனக்காரன். அவனுக்கு இருபத்தைந்து வயதிருக்கும். கலியாணமான வாலிபன். அவன் மனைவி அழகுள்ளவள், நாவல் கதை எழுதுபவர்கள் புகழ்வது போன்று.

அவ்விளைஞன் இளமையின் துடுக்குத் தனத்தினால் ஏராளமான பணத்தைக் கடனுக்காக வாங்கி, அடாத நெறிகளில் செலவு செய்து வந்தான். கடன் பெருகவே கடைக்காரர்கள் காசு கொடுப்பதையும் நிறுத்தி வைத்தார்கள். கடன் கிடைக்காத நிலையிலே கைகளில் உள்ள பொருள்கள் அடகுக்காகப் பயன்பட்டன. தனது மனைவியின் நகைகளும் தேவைப்படவே அவற்றையெலாம், அடி உதை முதலிய போர்க்கருவிகளால் அவளிடமிருந்து அவன் கைப்பற்றிக்கொண்டான். இவன் குடிப்பதனையும், கூத்திவிடு செல்வதனையும், கும்மாளம் போடுவதனையும் பொறுக்க முடியாத அவன் மனைவி என்னை நெருங்கி முறையிடலானாள். பெண்ணின் கண்ணீரை மாற்றுதற்காக அப்பேதை இளைஞனிடம் சில அறிவுரைகள் சொன்னேன். அவை செவிடன் காதில் செப்பிய உபதேசங்களாக மாறின. இன்று ஒத்துச் சொல்லுவான்; நாளையே அதனை வெட்டிப் பேசுவான். 'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு' என்ற பழமொழி அவன்மாட்டு நூற்றுக்கு நூறு பங்கும் மெய்யாகவே இருந்தது.

அடிக்கடி கணவனின் கசட்டுத் தன்மைக்குப் பலியான அவள் எடுத்ததற்கெல்லாம் என்னிடம் ஓடிவரத் துவங்கினாள். அடிக்கடி கண்டு களித்த கண்கள் அவளை வாழ்க்கைத் துணையாகக் கொண்டு வாழ விரும்பிற்று. விருப்பத்தை அவளிடம் விண்டேன். அவளும் அதற்கென்ன தடையென்று இசைந்து விட்டாள். என்னைக் கொள்ளுதற்கும், அவனைக் கொல்லுதற்கும் அவள் ஏற்ற தருணத்தை நாடியிருந்தாள். நஞ்சிட்ட உணவைத் தன் கணவனிடம் கொடுத்தருந்தச் செய்து தன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொண்டாள்; குடியினாலும், கூத்திகளின்

கூடுதலினாலும் இடோரன் இறந்து விட்டான் என்ற எண்ணத்தினால் எவருக்கும் எத்தகைய ஐயமும் ஏற்பட வில்லை.

சில வாரங்கள் சென்றவுடன் அவள் என்னுடனேயே என் வீட்டிலேயே குடித்தனஞ் செய்யத் துவங்கி விட்டாள். இன்ப வாழ்வுத்தேர் இடைஞ்சலின்றி உருண்டது. தேர் சென்ற வழியில் சேறு படிந்த பகுதி ஒன்று இருந்தமையால், அதனைக் கடந்து செல்ல இயலவில்லை. அத்துடன் இன்ப வாழ்வுத்தேர் தடைப்பட்டு முறிந்தது. 'சேறு படிந்த பகுதி உங்கள் வாழ்விலே என்ன' என்று கேட்கின்றாயா? இதோ சொல்லுகின்றேன்.

நான் நிறையப் பொருள் ஈட்டுகிறேன் என்னும் எண்ணம் சில பக்கத்துக் கடைக்காரர்களைப் பகைவர்களாக ஆக்கிவிட்டது. இந்தப் பகைவர்கள் ஒன்றெனக் கூடி என்னைக் கொன்றொழிக்கச் சதியொன்று செய்தனர். என் வீட்டின் அருகில் புகை மருந்துகளை வைத்து வீட்டைத் தகர்த்து எரியச் செய்த சதி அது. நான் அன்று வெளியூர் சென்று விட்டேன், வேலை காரணமாக. உன் இரு தம்பிகளுடன் (சினக்காரிக்குப் பிறந்த சிறுவர்களுடன்) சினக்காரி சதிக்கு இலக்காகி உயிர் துறந்தாள். போலீஸுக்குச் செய்தி அறிவித்தேன். அவர்கள் புலன் அறிகின்ற அளவுடன் நின்றுவிட்டார்கள். ஏனெனில் அவர்களில் பலர் மேற்படிச் சதிகாரக் கும்பலில் உறுப்பினர்களாக இருந்ததுதான்! இனியும் நான் இங்கிருப்பேன் என்றால் என் அழிவிற்கு நானே புதைகுழி தோண்டிக் கொள்ளுகின்றேன் என்றுதான் பொருள். எனவே நான் இனியுள்ள சொத்தைப் பறிகொடுக்க

விரும்பாததால் இப்போதே புறப்பட்டுவர விரும்பு கின்றேன்! அடுத்த கப்பலில் பெரும்பாலும் பார்க்கலாம் என்னையும் உன்னிரு தம்பிகளையும்!

உன் அன்பிற்குரிய தந்தை
சி. வேலப்ப முதலியார்."

இதுதான் தந்தையிடமிருந்து முருகனுக்கு முதன் முதலில் வந்த கடிதம். இந்தக் கடிதத்தைக் குறைந்தது முந்நூறு தடவை படித்திருப்பேன். அது அவ்வளவு இன்பம் அளித்தது எனக்கு! தந்தையின் வரவுகாண முருகன் வீடு வந்துவிட்டாலல்லவா நலம் பயந்ததாகும் என என் உள்ளம் பெரிதுந் தவித்தது. எனவே அவனைத் தேடுகின்ற நெறிகளிலே என் எண்ணம் உலா வியது. எட்டு ஆட்களை எட்டுத் திசைகளிலும் அனுப் பினேன், முருகனைத் தேடிப்பிடிக்க! பணம் செலவாகியது ஊற்று நீர் போல அவன் வரவைக் காணுதற்காக!

மீனுளுக்கும் அவளது மாமனாரின் வருகையைக் குறித் துக் கடிதம் எழுதியதுடன் நானும் ஒரு தடவை சென்று சொல்லிவந்தேன். அவளும் தன் மாமனார் வருகின்ற அந்த நாளில் புறப்பட்டுக் காட்டூர் வருவதாக ஒப்புக் கொண்டாள். பூசை நடக்க வேண்டிய கோயிலிலே சாமி இல்லை என்றால் அர்ச்சகரின் நிலைமை எப்படி யிருக் குமோ, அப்படி இருந்தது என் நிலைமை! ஒவ்வொரு நாளாகத் தோன்றித் தோன்றி மறைய வேலப்ப முதலி யார் வருகின்ற நாளும் நெருங்கிக்கொண்டே வந்தது.

ஒருநாள் காலையில் பலகாரம் சாப்பிட்டவுடன் வீட்டு முகப்பிலே வீற்றிருந்தேன்! தபால்காரன் ஓடிவந்தான்

தந்திக் கவருடன். முருகனுக்குப் பதிலாகக் கையெழுத்திட்டுத் தந்திக் கவரை வாங்கிப் பிரித்தேன். முருகனின் தந்தை மறுநாள் காலையில் வீடு வருவதாகத் தந்தி கொடுத்திருந்தார். தந்தியைப படித்த எனக்கு அமைதி குலைந்தது. முருகனைக் காணச் சென்றவர்கள் 'காண வில்லை' என்ற ஒரே பாட்டினைப் பாடிவிட்டுப் போய் விட்டனர். இதுகாறும் செய்த செலவுகள் எல்லாம் பயனற்ற முறையிலே, வீண் செலவுக் கணக்குப் புத்தகத்தில் இடம் பெற்றனவே என்பதெண்ணிப் பெரிதும் மனந் தளர்ந்தேன். அன்றையப் பொழுது மறைய, மறு நாட் பொழுது புலர்ந்தது!

மீனுளும் தான் குறிப்பிட்டபடி வீடு வந்து சேர்ந் தாள். நானும் அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தேன். சிறிது நேரத்திற்குள்ளாக வேலப்ப முதலியாரும், அவரது இருபிள்ளைகளுமாக ஜட்கா வண்டியிலிருந்து இறங்கினுர்கள். நான், 'வருக வருக' என மனமார வர வேற்றேன். மீனுள் முன் வந்து வந்த விருந்தோம்பி வரவேற்று நின்ருள்.

எங்களைக் கண்டு, தன் மகனைக் காணுமல் திகைத்து நின்ற முதலியாருக்கு, நான் எல்லா விபரத்தையும் எடுத்துரைத்தேன். 'நான் எழுதிய கடிதங்களுக்கு எல்லாம் பதில் வராதிருந்தமைக்குக் காரணம் இப்போது தான் விளங்குகின்றது' என்ருர். மறுநாட் காலை மீனுள், தன் தாய் வீடு நோக்கிப் பவந்தார் சென்ருள், முதலியாரிடம் விடைபெற்றுக்கொண்டு! முதலியார் தன்னிரு பிள்ளைகளுடன் சமையற்காரனை வேலைக்கமர்த்திக் கொண்டு வாழ்ந்து வந்தார்.

நான் ஒரு பக்கம் தேடினேன்; மீனுள் மற்றொரு பக்கம் தேடினுள்; முதலியார் இன்னொரு பக்கம் தேடினூர் முருகனை! நான் தோழன் என்ற முறையிலே! மீனுள் கொழுநன் என்ற முறையிலே! முதலியார் பெற்ற பிள்ளை என்ற முறையிலே!

முருகன்

பொட்டல் மாளிகையாகப், பொழிமுகில் கூரையாகப் பயன்பட என்னிருகைகளையுந் தலைக்கு அணையாக கொண்டு நான் அந்த அகன்று விரிந்த ஆலமரத்து நிழலில் படுத்துக் கிடந்தேன். என்னை இம்மரத்தடியிலே படுத்துக்கொள்ளச் செய்துவிட்டு, தன்கையில் இருந்த உணவில் சிறிதளவை எனக்கு அளித்த பின்னர்த் தன் (செயலை) கடமையை நோக்கிச் சென்றுவிட்டான் எனக்குத் துணையாய் நின்ற என்போன்ற அவ்வேழை மனிதன்! அவன் இன்னாரென்று எனக்குத் தெரியாது போனாலும் அவன் இரங்கிய உள்ளமுடையவன் என்பது எனக்குத் தெரியாமல் போகவில்லை. அவன் எனக்குச் செய்த நன்றிக்காக 'வாழி பல் ஊழி' என வாய்விட்டு வாழ்த்தினேன் செய்நன்றி மறவாச் சிந்தையுடன்!

எத்தகைய குற்றமும் செய்யாதிருந்த என்னைப் போலிசுக்கு இழுத்துச் சென்று, பொல்லாப் பட்டத்தையுஞ் சூட்டி மூன்று நாட்கள் போட்டுவைத்து, கைவலு உள்ளவரை உதைத்து நான்காம் நாட் காலையில் 'நிரபராதி' என என்னை விடுதலை செய்து வெளியே விரட்டிய போலீசார்களின் முறையற்ற செயலை எண்ணிப் பெரிதும் மனந்தளர்ந்த நான், எங்ஙனம் இந்த உலகத்தில் நீதி இருக்கின்றது என்பதை ஒத்துக்கொள்ள முடியும்? நீதி என்ற சொல்லும் நியாயம் என்ற சொல்லும் இன்றைய நாட்களிலே அகராதிகளில் காணப்படுகின்ற சொற்களே அல்ல! ஏழை அழியப் பிறந்தவன் எனவே

சட்டமும் அவனுக்குத் துணை செய்யாது இந்த அரசியலிலே!

செல்வம் படைத்த ஒருவனை யாதொருவிதக் காரணமும் இன்றி என்னை இழுத்துச் சென்றதுபோலப் போலீசுக்கு இழுத்துச் சென்று மூன்று நாட்கள் அடைத்து வைத்து உதைக்கும் மட்டும் உதைத்து, அதற்குப் பின்னர் நிரபராதி என்று சொல்லி வெளியே விரட்டுதற்குப் போலிசாரின் உள்ளத்திலே உறுதி உண்டா? அல்லது ஊக்கந்தான் உண்டா? பணக்காரன் என்ன கொடுமை செய்யினும் சடுதியில் தாக்காத சட்டம், ஏழைகள் வாளா இருக்கும்போதே நினைத்த அளவில் நிந்தனை செய்யத் துணை செய்யுமோ? ஏழை பணக்காரன் என்ற வேறுபாடு சட்டத்தின் முன்னிலையில் தாண்டவமாடலாமா? என்றெல்லாம் நான் என் மனத்திற்குள்ளேயே கேட்டுக் கொண்டேன்; வெளியே வாய்விட்டுச் சொன்னால் உதைப்பார்களே என்ற பயம் என்னை ஆட்கொண்டதால்!

முதலாளித்துவத்தின் முன்னர்த் தொழிலாளர்கள் கதறுவதைப் போன்று சட்டத்தின் முன்னின்று தாழ்த்தப்பட்ட ஏழைகளும் கதறுகின்றார்கள். ஏழைகள் ஒழுங்குடன் வாழலாம் என்று சொல்லுபவன் மூளையற்ற பேதையேயாகும். அநியாயம் அவர்களை அரித்துத் தின்னும்போது அவர்களிடம் எங்ஙனம் அமைதியோ, அடக்கமோ, ஒழுங்கோ தாண்டவமாட முடியும்? என்றெல்லாம் நான் எண்ணிக் கொண்டே இருந்தேன்.

இந் நிலையில், 'கடகட' என்ற ஒலி என் காதுகளில் பாய, நான் கழுத்தைச் சிறிது திருப்பினேன். மாடு பூட்

டிய பெட்டி வண்டி ஒன்று ரோட்டிலே வந்து கொண்டிருந்தது. இம்மாதிரியான பெட்டி வண்டிகளிலே பாதிரிமார்கள் செல்லுவதை நான் அடிக்கடி, திருநகரில் கடையில் இருக்கும் போதெல்லாம் பார்த்திருக்கிறேன். எனவே இந்த வண்டியில் வருகின்றவரும் பெரும்பாலும் பாதிரியாகத்தான் இருக்கவேண்டும் என நான் எண்ணியதில் வியப்பு என்ன?

பெட்டி வண்டியின் நினைவு போக்குவரத்திற்குரிய பொருள்களையெல்லாம் எனக்கு நினைவூட்டியது! முந்திய காலங்களில் கால் நடையிலே தான் நினைத்த இடத்திற்குச் செல்லத் துணிந்த மனிதன், நாளாவட்டத்தில், கட்டை வண்டிகளிலும், மோட்டார்களிலும், ஆகாய விமானங்களிலும் ஆக இன்று, காலத்தையும் தூரத்தையும் கடந்து செல்லுகின்றான். இத்தகு விஞ்ஞான முன்னேற்றமடைந்துள்ள இந்தக்காலத்தில் கூட மனிதனை மனிதன் இழுத்துச் செல்கின்ற ரிக்ஷாக்கள் பயன்படுத்தப் படுகின்றன என்றால், இந்த நாட்டிலே மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள உறவுமுறை நன்கு தெரிகின்றதல்லவா? 'உள்ளவன்' 'இல்லாதவன்' என்ற வேறுபாடு இந்த நிலத்தில் நிலைத்திருக்கின்றதால்தானே இவ்வளவு அநியாயங்களும்?

இங்ஙனமாக கண்ட கண்ட பொருள்களில் எல்லாம், செல்வனுக்கும், சீரழிந்தவனுக்கும் உள்ள தொடர்பை எண்ணி எண்ணி இரங்குவது என் கடமையாகவே போய் விட்டது. சிறிது நேரத்திற்குள்ளாக, ரோட்டிலே வந்து கொண்டிருந்த பெட்டி வண்டி, என் அண்மையிலே வந்து நின்றது, நான் திகைப்படைந்தேன் ஏன் என்று தெரி

யாமல்! வண்டிக்குள் இருந்த பாதிரியார் கீழே இறங்கினார். என்னருகே வந்தார். என்னை உற்று நோக்கினார். மூர்ச்சையாகிக் கிடக்கின்றேனா அல்லது விழித்துக் கொண்டு கிடக்கின்றேனா என்று ஐயங்கொண்டு என் மூக்கிலே விரலை வைத்துப் பார்த்தார். வாய்திறக்க முடியாத நிலையிலே, கண் திறந்து அழுதேன். கண்ணீரைத் துடைத்த வண்ணம் தன் கைகளினாலேயே என்னைத் தூக்கி வண்டிக்குள் இருக்கச் செய்துவிட்டு, வண்டியை 'ஜெனரல் ஆஸ்பத்திரிக்கு' ஓட்டிக்கொண்டு போகும்படியாக வண்டிக்காரனுக்கு ஆணை இட்டார்!

வண்டி ஜெனரல் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது. பாதிரியார் என்னை மெல்ல அழைத்துக்கொண்டு ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தார். நான் அவர் கைகளை என் கைகளால் பற்றியவண்ணம் அடிமேல் அடிவைத்து நடந்தேன். நாங்கள் இருவருமாக 'பெரிய டாக்டர் ஐயா' இருந்த அறைக்குள் நுழைந்தோம். பாதிரியாரும் டாக்டருமாக ஆங்கிலத்திலே தங்கள் கருத்தைப் பரிமாறிக் கொண்டார்கள் (இருவரும் தமிழர்கள் என்பது குறிப்பிட வேண்டியது).

நான் மன்றோ வார்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டேன் சிகிச்சை பெறுவதற்காக! பத்து ரூபாய் நோட்டு ஒன்றை என்னிடம் தந்த பின்னர் பாதிரியார் பிரிந்து சென்றார். தாயினும் சாலப்பரிந்து எனக்கு வேண்டுந் துணை செய்த அவ்வாண்டகையைப் பிரிந்தமையால் உண்டாய மனவேதனை, ஊனில் படர்ந்திருந்த பெரு வேதனையைவிட மிகவும் என்னை வாட்டி வதக்கியது. செல்வத்துப் பயன் சேமித்து வைத்தலே என்றெண்ணி

ஏழைகள் வாயில் மண்ணை வாரிக் கொட்டும் மக்கள் குழாத்தினிடையில், செல்வத்துப் பயன் வறியார்க்கீதல் என்ற எண்ணங்கொண்ட பாதிரியார் போன்ற பெருமக்களும், வாழ்வதனை வியப்பெய்தினேன். பாடுபட்டுப் பணத்தைத் தேடிக் குவிக்கும் கெடுகெட்ட மனிதர்களைப் பாவிகாள் என விளித்து, கூடுவிட்டு ஆவி நீங்கியபின் யாரோ அநுபவிப்பார் அந்தப்பணம் என விளம்பிய தமிழ்ப் பெண்ணின் அறிவுரையை அறவே மறந்து, அதனைப் பொருட்படுத்தாது திரிகின்ற மக்கள்பால் என் மனம் வசைமாரி பொழிந்தது.

ஆலயம் பதினாயிரம் கட்டுவதைவிட அன்ன சத்திரம் ஆயிரம் நாட்டலைவிட ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் சிறப்புடைத்தென்று செப்புகின்ற மக்கள், செயலளவிலே என்றேனும் இறங்கியிருக்கின்றார்களா? இல்லையே! செல்வத்துப்பயன் துய்த்தலே எனக் கற்ற மக்கள், கற்றபடி நின்று ஒழுகியிருக்கின்றார்களா? இல்லையே! தோட்டிற்கும் புளியம்பழத்திற்கும் தொடர்பு இருப்பது போலல்லவோ இத்தகையோரின் செய்கையும் சொல்லும் அமைந்திருக்கின்றன? இதனை எண்ணுகின்ற போழ்து தான் ஏன் எல்லோரும் பாதிரியாரைப் போன்று மாறி விடக்கூடாது எனவும் எண்ணினேன் அவரது பண்பு கண்டு; மதமாற்றம் கருதி அல்ல!

பாதிரியார் பிரிந்து செல்லவே, நான் எனக்கென்று ஒதுக்கப்பட்டிருந்த ஒரு நாற்காலியில் படுத்துக் கொண்டேன். என்னை ஒரு இளம் பெண்மணி அழைத்தாள். மருத்துவச்சாலையில் இளம் பெண்மணிக்கு என்ன வேலை என எண்ணற்க. இளம் பெண்மணி என்றது 'நர்ஸ் ஒருத்

நியை'! அவளது அழைப்பிற்கிணங்கி அறைக்குள் நுழைந்த நான் அணிந்து கொண்டு வந்த ஆடைகளை எல்லாம் அவிழ்த்துக் கொடுத்து விட்டு, அவள் தந்த ஆடைகளை வாங்கி அணிந்துகொண்டேன். அங்கு உள்ள அனைவரும் அணிந்திருந்த ஆடைகளுக்கும் நான் அணிந்துகொண்ட ஆடைக்கும் துளிகூட அமைப்பு வேறுபாடு இல்லாதிருப்பது கண்டு, எல்லா நோயாளி களுக்கும் இங்கு ஒரேமாதிரியான உடுப்புக்கள் கொடுப் பது வழக்கம் என்பதை உணர்ந்து கொண்டேன். பத்து ரூபாயையும் பழைய எனது உடுப்புக்களுடன் வாங்கி வைத்துக்கொண்ட 'நர்ஸ்' பக்கத்துப் படுக்கையில் படுத்திருந்தவரைக் காணுதற்காகச் சென்றுவிட்டாள்.

பாவை நல்லாளைப் பார்த்து இனிமைகொண்ட என் நெஞ்சம், அவள் பறந்து சென்றதும் பக்கத்துப் படுக் கையில் படுத்திருந்தவனின் மேற்கருத்துக் கொண்டது. அவளது இனிமை இவனது கொடூரத்தால் மறைந் தொழிந்தது! பொழுது போகாதிருந்ததால், அருகில் இருந்த கிழவனருடன் பேசத்தொடங்கினேன். 'உமக் கென்ன ஐயா உடம்புக்கு?' என்பது என் கேள்வி. அதற்கு அவர் தந்த பதில் ஒரு பெரியகாதை. அக்காதை மிக மிகச் சுவையும் கவர்ச்சியும் உடையதாய்ப் போய்க் கொண்டிருந்ததால் நான் 'இம்' போட்டுக் கொண்டே கதையைக் கேட்டுக் கொண்டு வந்தேன். நான் உற்றுக் கவனிப்பதைக் கண்டு கொண்ட கிழவர் உற்சாகத்துடன் ஒன்றினையும் ஒளியாமல் சொல்லிக் கொண்டே வந்தார்.

இரு கோப்பைகளில் இருவருக்கும் ஒரு பையன் உணவு கொண்டுவந்த பின்னர்த்தான் எங்களது கதை

யிலே பிளவு ஏற்பட்டது. கதை கேட்டுக் களித்திருந்த நான், உணவினை உண்டு புளித்துப்போனேன். உண்ணா நோன்பு கொள்ளலாமா என்ற நினைவு, அவ்வுணவினை உண்ணுங்கால் தோன்றிற்று என்றால் அவ்வுணவின் நீர்மையை என்னென்று சொல்லுவது? என்ன இருந்தாலும் அவ்வுணவு விலையின்றித் தருவதுதானே என்ற நினைப்பு எனக்கு அமைதியைத் தந்தது!

அந்தக் கிழவர் பாங்களூர் என்னும் பட்டணத்திலே பிறந்தவர். ஒருகாலத்திலே செல்வமும் செல்வாக்கும் மிகுந்து வாழ்ந்தவருங்கூட! அறியாமையால் அவ்வளவையும் இழந்து தனது தலையெழுத்தின் விளைவு என்று எண்ணி அமைதி கொண்டவர். அவரது காதற் கலியாணங்கள் கதைபோல விரியுந் தன்மையன. கறுப்பாயி என்னும் காரிகையை, கரி நிறத்து ஆரணங்கைத் தாலிகட்டித் தனது தாரமாக முதன் முதலிலே கொண்டார். ஆண்மகன் ஒருவனுக்கு அவளைக் கட்டிக் கொடுத்த ஒரே காரணத்தினால், நாம் பெண்ணென்று அவளை ஒத்துக்கொள்ளலாமே தவிர்த்துத் தோற்றங் கருதி அவ்வாறு உறுதிசெய்ய முடியாது!

எல்லோர் கண்களுக்கும் எப்பொழுதும் தோன்றாத பேய் இனம் ஒன்று இருக்கின்றது என்பதை மறுப்பவர்கள்கூட, பெண்களிடையே, பொல்லாத குணம் படைத்த மக்களைப் பேய்கள் என்று நாம் சொல்லுவோமாயின், ஒத்துக்கொள்ளத்தான் செய்வார்கள். பேய் இனம் இல்லாதிருக்கலாம். அதற்காக எங்ஙனம் பேய்க் குணமே இல்லாதிருக்கமுடியும்?

இதுபோன்று பேய்க்குணம் படைத்த இனத்தைச் சேர்ந்தவள் தான் கறுப்பாயி. கிழவர், பெரும்பாடுபட்டுத் திக்குமுக்காடி மூன்று ஆண்டுகளைக் கழித்துவந்தார். இனியும் இவளுடன் வாழ்வதற்கு இறந்துபடுதல் மேல் என்ற எண்ணம் கிழவனாருக்குத் தோன்றத் துவங்கியதுமே சுப்பாயி என்ற தன் வீட்டில் வேலை செய்துவந்த வேலைக்காரியைப் பக்கபலமாகச் சேர்த்துக் கொண்டு அவர் தன் மனைவி நல்லாள் கறுப்பாயியை முடித்துக் கட்டுகின்ற வேலையிலே முனைந்துவிட்டார். கறுப்பாயியைச் சுப்பாயி கொன்றொழித்துவிட்டால் கிழவனாரின் வீட்டுக்குச் சுப்பாயி தலைவியாக்கப்படுவாள் என்ற முடிவானது இருவரிடையும் உண்டாகியது.

சுப்பாயி, இரவு பகலாகக் கறுப்பாயியைக் கொல்லுதலில் தனது மூளையைச் செலுத்தினாள். நஞ்சிட்டுக் கொல்லலாம் தனது சமையல் திறத்தினால் என எண்ணிய சுப்பாயி, ஊருக்குள் பரபரப்பு ஏற்பட்டுவிடுமோ எனப் பயந்து அவ்வெண்ணத்தைக் கைவிட்டாள். யாரையும்விட்டுக் கொல்லச் செய்யலாம் என எண்ணியவள் போலீசாரின் மூலம் புலனறியப்பட்டுப் பிடிபட்டு விடுவோமே என நடுங்கி அவ்வெண்ணத்தையும் நழுவவிட்டாள். மனத்தைப் புண்படுத்தி அவளாகவே மாண்டு போகும்படி செய்கின்ற ஒரே ஒரு தீங்கற்ற வழிதான் சுப்பாயிக்குத் தோன்றியது.

நாட்கள் ஆக ஆகச் சுப்பாயின் போக்கிலும் மாறுதல்கள் ஏற்பட்டன அதிகமாக! வேலைக்காரச் சுப்பாயி வீட்டுக்காரச் சுப்பாயி என்ற நினைப்புடன் நடந்துவந்தாள். இஃது வீட்டுக்காரக் கறுப்பாயிக்கு வேதனையைத் தந்தது.

கறுப்பாயியின் கொடுமைகளுக்குப் பயந்த கிழவர் இவ் வழக்கிடுகளில் தன் தலையைக் காட்டாமல் ஒன்றும் தெரியாதவர்போல் இருந்துவந்தார். கறுப்பாயி காலித்தனம் செய்கின்ற நிலி என்பதனைத் தனது விளம்பரத்தால் பரப்பிவிட்டாள் சுப்பாயி. ஊரார்கள் கறுப்பாயியைக் காணுமிடங்களில் எல்லாம் சாடை சொல்லிக் கேலி செய்யத் துவங்கினார்கள். ஊரில் தூற்றுதலுக்கு ஒடுங்கிய கறுப்பாயி வீட்டிற்குள்ளேயே ஒடுங்கிக் கிடந்தாள்!

ஒருநாள் தன் வீட்டின் பின்புறமாக உள்ள கிணற்றில் கறுப்பாயி நீர் இறைத்துக் கொண்டிருக்கும்போது மஞ்சுவிரட்டுக் காளையொன்று துள்ளிக் குதித்தவண்ணம் ஓடிக்கொண்டு வரவே, பயம் மிகுதியினால் கையில்பிடித்திருந்த கயிற்றைக் கீழே நழுவவிட்டுவிட்டாள். கைப்பிடியினின்று நழுவிய கயிறு குடத்தின் கனத்தினால் கிணற்றிற்குள்ளாகப் பாய்ந்தது. குடத்தைப் பிடிப்பதற்காகக் குனிந்த கறுப்பாயி மாடு நெருங்கி வரவே, பயம் மிகக் கொண்டு கால்களையும் மேலே தூக்கினாள். கைகள் கிணற்றிற்குள் குடத்தைப் பிடிக்கக் கால்கள் பயத்தினால் மேலெழும்ப, கறுப்பாயி கிணற்றுக்குள்ளே விழுந்தாள். விழுந்த கிணறு மிகவும் குறுகலாகப் பரப்பளவு உள்ளதாக இருந்தமையால் கறுப்பாயியின் உயிர் உடலினின்றும் பிரிந்துவிட்டது.

மஞ்சுவிரட்டு மாட்டினை விரட்டிக்கொண்டு வந்த மணியன், கருப்பாயி கிணற்றுக்குள் 'விழுவதனைத் தன் கண்களாலேயே கண்டு பெருங்கத்துக் கத்தினான். பக்கத்து வீட்டார்கள் எதுவோ என்னவோ என்று ஓடி வந்தார்கள். ஊர் முழுவதிலும் கருப்பாயியின் சாவு எட்டி

யமையால் எல்லோரும் ஓடி வந்து கிணற்றங் கரையைச் சூழ்ந்துகொண்டனர், சுப்பாயியும் பொய்க் கண்ணீர் மிகவும் வடித்துத் துடிதுடித்தாள் அக்கூட்டத்தாரின் முன்னிலையிலே!

கருப்பாயியைக் கிணற்றிலிருந்து வெளிக்கிளப்பக் குற ராமனுக்கு அழைப்புப் போகவே, அவன் ஓடிவந்து சேர்ந்தான் கணநேரத்தில். இரண்டு புட்டி கள்ளுத் தண்ணீரை வயிற்றுக்குள் அடைக்காமல், கிணற்றில் இறங்க முடியாதென்று சத்தியாக்கிரகஞ் செய்யத் துவங்கி விட்டான் அவன். இரண்டு புட்டிகள் வாங்கித் தருவதாக உறுதி வாங்கிக்கொண்ட பின்னர், தான் குடித்து வந்த இரண்டு புட்டிகள் போதுமென்ற நினைவுடன் கிணற்றிற்குள் இறங்கினன். இராமன் வில்லை எடுத்தான் ஒடித்தான் என்று நயம் சொல்லுவார்களே கம்ப ராமாயணப் பண்டிதர்கள் அதுபோல குற ராமனும் கிணற்றிற்குள் இறங்கினன்: பெண்ணுடன் சட்டென்று வெளியேறினன் எல்லோருந் திகைக்கும்படியாக!

பிணத்திற்குரிய கர்ம விளைகளையெல்லாம், களிப்புடனே செய்து முடித்த பின்னர் சுப்பாயி என்ற சுந்தரி நல்லாளோடு காதல் வாழ்வு துவங்கினர் கிழவர். மணமான மறு ஆண்டே மகிழ்ச்சிக்குரிய மகனொருவனைப் பெற்றுவிட்டார் கிழவர். நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பிள்ளையாண்டான் வளர்ந்து வந்தான். கிழவரின் மகிழ்ச்சிக்கருவூலம் அவன்தான்! கடவுள் தனக்கு நல்லன செய்ய எண்ணியே கருப்பாயியைக் கொன்று ஒழித்து விட்டார் என்பது சுப்பாயியின் எண்ணம்!

தனது மகனுக்குக் கண்ணுச்சாமி என்று பெயரிட்டுத் தனது கண்கள்போலக் காப்பாற்றி வந்தார் அக்கிழவர். மகனின் மேலிருந்த பெருவிருப்பத்தால், அவன் பெயராலேயே ஒரு துணிக்கடை திறந்து நடத்தி வந்த கிழவனருக்குப் போர் நிலை காரணமாக அதிக லாபம் கிடைத்தது. அதிக லாபம் அனைத்தையும் தனது சுந்தரவதி சுப்பாயியிடம் ஒப்படைத்து விட்டார். சுப்பாயியிடம் பணப் பெருக்கம் அதிகமாகவே, கிழவனரைச் சிறிது சிறிதாக வெறுத்துத் தள்ளத் துவங்கினள். ஓர் இரவில் எல்லா நகைகளையும், பணத்தையும் எடுத்துக்கொண்டு ஓடி விட்டாள் சுப்பாயி. ஏன் ஓடினுள் எதற்கு ஓடினுள் என்று கிழவர் திகைப்படைந்தார்.

மனைவியை இழக்க நேரிட்ட கிழவர் தனது மகனுடன் மனமொடிந்து வாழ்ந்து வந்தார். பொருளாதார நிலை சீர்கேடுறவே கிழவர் மனமற்ற நிலையிலே மகனின் நல் வாழ்வை விரும்பி, அவனைப் பிரிந்துவாழ விரும்பினர். மகனைப் பிரிவது என்றால் கொன்று விட்டுத் தான் பிரிந்து வாழ்வதா அல்லது நல்ல இடத்திலே அவனை விற்று விட்டுத் தான் பிரிந்து வாழ்வதா என அக் கிழவர் எண்ணினர். கடைசியாகக் காட்டூரில் சின்னப்ப முதலியாரிடம் தன் பிள்ளையை விற்றுவிட்டார்.

பிள்ளையை விற்றுப் பெற்ற பணத்தைக் கொண்டு கிழவர் சிலகாலம் தான் வாழ முடிந்தது. அப்பணம் விரைவிலே செலவாகவே குடியிருந்த வீட்டையும் விற்று விட்டார். வீட்டை விற்ற பணமும் நீண்டநாள் துணை புரியவில்லை. குந்த நிழலும் குடிக்கக் கூழும் அற்ற நிலையிலே கிழவனர் ஒரு ரோட்டின் அருகில் படுத்துக் கொண்

டிருந்தார். ரோட்டிலே மிக விரைவாக வந்து கொண்டி ருந்த மோட்டார் கிழவரின் காலிலே ஏறிக் காலை முறித்து விட்டது.

கால் முடிந்துபோகவே, எழுந்து ஓடமுடியாத நிலை யிலே 'ஐய்யோ முறையோ' எனக் கூச்சலிட்டார் கிழவர். இரவில் எழுந்த குரல் எங்கும் துரிதமாகப் பறந்தது. மக்கள் சிலர் அந்தக் கிழவரைச் சுற்றிக் கூடிவிட்டனர். என்ன வென மக்கள் சிலர் கேட்டனர் சிரித்த முகத் துடனே சிந்திய இரத்தத்துடன் கிடக்கும் ஏழைக் கிழ வனைக் கண்டு! வறியவன் என்பதுடன் வயோதிகன என்றமையால் வந்த எல்லோரும் வந்தவழியே சென்று விட்டனர். காரினை ஓட்டிக் கொண்டு வந்தவன், சிறிது சித்தம் இளகிய சிறியனாக இருந்தமையின், கிழவனைத் தனது காரிலேயே ஏற்றிக்கொண்டு வந்து ஜெனரல் ஆஸ்பத்திரியில் டாக்டரிடம் சிபாரிசு செய்து சேர்த்து விட்டுச் சென்றான். சிறிது செலவு தொகையும் கிழவனிடம் தந்தான்!

இவ்வளவு பெரிய வரலாற்றை 'இம்' போட்டுக் கொண்டு வந்த என்னிடம் சொல்லி முடித்தார் அந்தக் கிழவர். அக்கிழவரின் நிலையைக்கேட்ட காதுகள், கண் களைச் சிலதுளிகளைச் சிந்தச் செய்தன! நான் அழுது கொண்டே அழவேண்டாம் என்று கிழவனுக்கு அமைதி சொன்னேன்.

மத்தியானச் சாப்பாடு சாப்பிட்டு முடிந்தவுடன், நான் அக்கிழவனாரை, உங்கள் மகனைப் பற்றி இப்போது உங்களுக்கு ஏதேனும் தெரியுமா என்ற கேள்வியுடன்

மெல்லப் பேசிற்று இருந்தேன். 'தெரியாது' என்று மண்டை அசைவினால் பதில் சொன்னார். நான் அவருக்கு அவரது பிள்ளையைப் பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் விரித்துரைத்தேன். அவரது பிள்ளை எனது நெருங்கிய உயிருக்குயிரான தோழன் கண்ணுச்சாமி என்பதை அறிந்து கொண்ட பின்னர், நான் அவரது பிள்ளையைப்பற்றிய விபரங்கள் எல்லாவற்றையும் விரித்துரைத்தேன் என்பதிலே வியப்பில்லை அல்லவா?

கண்ணுச்சாமி என்னிடத்தில், தான் ஓர் வளர்ப்புப் பிள்ளையென்றும, வறுமைக் கொடுமையால் பெற்றவரை இழந்த பிள்ளையென்றும சொல்லி அழுததெல்லாம் என் அகக்கண் முன்னே தோன்றித் தோன்றி மறைந்தன. இந்த நடந்தவற்றை யெல்லாம் விரித்தெழுத என்றுள்ளம் விரும்பிற்று. ஆனால் அதற்கேற்ற வாய்ப்புக்கள் மருத்துவச்சாலையில் இல்லாததால் அவ்வெண்ணம் மெல்லமெல்ல என்றுள்ளத்தை விட்டு நழுவிட்டது.

ஒரு மாதகாலம், அந்தக் கிழவருடன் பலவற்றையும் பற்றிப் பேசிய வண்ணமாக எனது காலத்தைக் கடத்தி வந்தேன். நோயும் குணப்பட்டுக் கொண்டே வந்தது. இது போன்ற மருந்துச்சாலைகள் இல்லாதிருக்குமாயின், ஏழைகளின் தொகை ஏராளமாகக் குறைந்துதான் இருக்கும் என்பதற்கு ஐயமே இல்லை. தங்குதற்கு இடம் அளிப்பதுடன், உண்பதற்கு உணவும் அளித்துப் போதாததற்கு உற்றநோயையும் போக்குதற்குப் பாடுபடுகின்ற இந்தக மருத்துவச்சாலைகள் 'வாழி வாழி' எனவாழ்த்தினேன். ஏழைகளைக் காப்பாற்றுகின்ற பணியிலும் அரசாங்கம் ஈடுபடுகின்றது என்பது அறி

கின்ற பொழுது என் நெஞ்சங்கொண்ட இன்பந்தான் என் நோயின் சரிபாதியை ஒழித்து நலந்தந்தது என்று நான் சொல்லுவேனாயின் அது மிகையே அல்ல.

சரியாக முப்பதாம்நாட் காலையில் நான் வீடு செல்ல லாம் என்று மருத்துவசாலைத் தலைவர் என்னிடம் தெரிவித்தனர். செல்லுகின்றபோது எனது பழைய உடுப்புக்களையும் பத்து ரூபாவையும் தந்துபோகச் செய் தனர். அவர்களிடம் என் அன்புளத்தைத் தெரிவித்துக் கொண்டு, எனது பக்கத்துப்படுக்கையில் படுத்திருந்த கிழவனிடம் விடைபெற்றுக் கொண்டு நான் அதனை விட்டு வெளியேறினேன்.

எங்கே போவது என்ற கேள்வி என் உளத்திலே இடம் பெற்றது. வீட்டிற்கு அதாவது காட்டுருக்கே போய்விடலாம் என எண்ணிய நான் கைதி என்று கேலி பண்ணப்படுவேனே என எண்ணி, வெட்கத்தால் அவ்வெண்ணத்தை அகற்றிவிடத் துணிந்தேன். வெட் கத்தால் வீடு செல்ல விரும்பவில்லை என்றால் வேறு எங்குதான் போவது என்று நான் எண்ணுகையில் என் உயிரனையாள் மீனுவின் நினைவு வந்து என்னைக்கலக் கியது. மருத்துவச்சாலையில் இருந்த திங்கள் முழுதும் ஓயாது அவளை நான் எண்ணி எண்ணி ஏங்கியமையை யார் சென்று அவளிடம் உரைக்கவல்லார்?

நான் சில இலக்கியங்களில் படித்திருக்கிறேன், காத லர்கள் பிரிந்து கலங்குவதை. காதலனைப் பிரிந்த காதலி தனிமை நோயைத் தாங்காமல் வண்டினையும், தென்றலை யும் காதலரிடம் தூதுபோக்கித் துயர் உறுவதை இலக்

கியங்களிலே நான் கண்டு கலங்கியதுண்டு. ஊணுறுங் கொள்ளாது உறக்கமுந் துறந்து, பேறுநர் வேண்டாது, பிணிபல உற்று பாதுங்குறியாது, பண்ணும் இசையாது, காற்றிலேத் தூற்றிக் கார்குழல் முடியாது விரித்துப் போட்டுக்கொண்டே கண்ணுக்கு மை இட்டாது, காதலரை நினைத்து காதல் மிகுதியால் வேதனைப்பட்டு விக்கல் கொள்ளுகிற காதலினர் பெண்களைப்பற்றிக் காவியங்களிலே, நான் அடிக்கடி படித்துக் கலங்கியதுண்டு. இப்போது அவற்றையெல்லாம் எனது வாழ்க்கையிலே உணர்ந்து அலறுகின்றேன்.

பெண்ணைப் பிரிந்து வாழ்வோ அன்றி வேறிடத்தில் தனித்திருந்து வாழ்வோ என்னுடைய எனக்கு விருப்பம் கிடையாது. எனவே ஊருக்குப்போய் வருவதுதான் சிறந்தது என்று முடிவுக்கு நெடுநேரம் கழித்து வந்தேன். கையில் இருக்கின்ற பத்து ரூபாயை எடுத்துக் கொண்டு அந்த ஊரின் பஸ் ஸ்டாண்டை விசாரித்துக் கொண்டே, வந்து சேர்ந்தேன். நல்ல வேளையாக அங்கிருந்து திரு நகருக்கு என ஓர் கார் அரை மணி நேரத்தில் செல்ல இருப்பதாகத் தெரிந்து அக்காரிலே ஏறிக் கொண்டேன். ஒரு ரூபாயைக் கொடுத்து டிக்கட் வாங்கிய பின்னர்தான் எனக்கு அமைதி உண்டாயிற்று; அதுவரையிலும், இடம் கிடைக்குமோ, கிடைக்காதோ, என்றெல்லாம் எண்ணிப் பயந்தேன்! எட்டு மணிக்குக் காரில் ஏறியவன் சரியாக இரண்டு மணி நேரத்தில் அதாவது பத்து மணிக்கெல்லாம் திருநகரை அடைந்து விட்டேன். அப்போது என் உள்ளம் உற்ற நிலையினை உரைப்பதற்கே இயலாது!

திருநகரில் எனக்கு ஏராளமான மக்களை நன்கு தெரியும். அந்த நகரில் எனக்கு ஒரு கடை இருந்தமையால், அதனால் எனக்கு அறிமுகமான சிலர் 'ஏது ரொம்ப நாட்களாகக் கடையைத் திறக்காமலேயே இருந்துவிட்டீர்களே? என்ன காரணம்?' என்று விசாரித்தார்கள். அவர்களிடம் 'உடல் நலக்குறைவால் கடையைத் திறக்க முடியாமலேயே போய்விட்டது, இனிமேல் கடைக்கு வந்துவிடுவேன்' என நாசுக்காகப் பதில் சொல்லித் தப்பித்துக் கொண்டேன். வேறு சிலர் கண்டவுடன், நெடு நாட்களாகக் காணாது தேடிய ஒரு பொருளைக் கண்டுவிட்டவர்கள் போலப் பேந்தப் பேந்த விழித்தார்கள். அவர்களிடம் வாய்கொடுக்க விரும்பாததால் நானும் பதிலுக்குப் பேந்தப் பேந்த விழித்துவிட்டு வந்து சேர்ந்தேன்.

திருநகரிலிருந்து காலை வெயிலையும் கருதாது கடகட வென்று காட்டுராகிய எனது ஊரை நோக்கி நான் நடக்கலுற்றேன். அப்பாதை எனக்கு என்றுமில்லாத புத்துணர்ச்சியினைத் தந்தது. இடையில் சிலநாட்களாக அப்பாதையில் வந்து வந்து நடந்து அறியாமல் இருந்த எனது கால்கள் கூடக் கூச்சங்கொண்டன என்றால் கூறுவானேன் நான் உற்ற உணர்ச்சிகளை! ஊர் நெருங்க நெருங்க என்னுள்ளத்தின் ஆவலும் மிகுதிப்பட்டது. வீட்டிலே மீனாள் தனித்து வாடுவதாகவும் கன்னுச்சாமி போன்ற என் தோழர்கள் ஆறுதல் சொல்லுவதாகவும் என் கண் முன்னே சில காட்சிகள் தோன்றித் தோன்றி மறைந்தன!

பகலிலோ இரவிலோ எங்களூர் மக்கள் வெளியே சுற்றிக் கொண்டு திரியமாட்டார்கள். எப்போதும்

எங்களூர் வீதிகள் மக்கள் நடமாட்டம் அற்றுத் தூங்கிய வண்ணமாகத்தான் இருக்கும். அவர்கள் கூப்பனுக்கு நெல் வாங்குவதற்கும் கொப்பத்தான் கோவிலுக்குப் பூசை செய்யவும் அல்லாமல் விறுக மற்றைய நேரங்களில் வெளிவருவதே கிடையாது. அன்றும் வழக்கத்திற்கேற்ப ஊர் தூங்கிக் கொண்டே இருந்தமையால் நான் வெகு வேகமாக வந்து எனது வீட்டினை அடைந்து விட்டேன். வீடு திறந்த நிலையிலே காட்சி தந்தது கண்டு நான் திடுக்குற்றேன். ஆண் பிள்ளைகளின் குரல் வீட்டினின்று எழுந்து வீதி நோக்கி வந்தன. நான் முதலில் ஐயமுற்றேன் மீனாளைப்பற்றி! மீனாள் என்னைக் காணாததால், வேறு ஆடவர்களின் தொடர்பு கொண்டிருக்கின்றாளோ என எண்ணிப் பெண் குலத்தையே வையத் துவங்கினேன். திரும்பிப்போய் விடலாமா என்ற எண்ணங்கூட என் உள்ளத்தைத் தீண்டியது.

திண்ணையில் ஒரு சிறுவன் 'நீயார்' என்று கேட்டான் மிடுக்கு முரணாக, ஆனால் இன்றைய நியதியை ஒட்டி! அந்தப் பையனை ஓரே அறை அறைந்து விரட்டி விடலாமா என்று வீட்டின் வாசற்படியில் ஏறும்போது மற்றொரு பையன், முதல் பையனின் அண்ணன் என்று எண்ணுகின்றேன், 'ஏன் வீட்டிற்குள் நுழைகின்றாய்' என்று எரிகின்ற தீயில் எண்ணெயைக் கொட்டினான். சிறு பிள்ளைகளின் இரைச்சலைக்கேட்டு ஒருவன் ஓடிவந்தான். வந்தவன் என்னைக் கண்டவுடன் 'முருகனா!' என்று பெருமூச்சுவிட்டு வாயினைத் திறந்த வண்ணம் நின்றான். வேறு ஒன்றும் பேசவில்லை! அவன்தான் கண்ணுச்சாமி.

பொழுது போக்குதற்காக என் தந்தையுடன் பேசிக் கொண்டிருக்கலாம் என்றெண்ணி கண்ணுச்சாமி அன்று எங்கள் வீட்டிற்கு வந்திருப்பதாகச் சொன்னான், நகைப்பு வாயை அடைத்துப் பேசவிடாமல் தடுப்பதையும் மீறி! பின்னர் அவன் மூலமாக என் தந்தையார் திரும்பி வந்திருப்பதையும், மீனாள் கரையில் போட்ட மீன்போல துடிப்பதையும் விரிவாகக் கேட்டுக் கொண்டேன். கண்ணுச்சாமி இக் கதைகளையெல்லாம் சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது தோட்டத்திற்குள் வேலை செய்து கொண்டிருந்த என் தந்தை என் கண்முன்னர் தோன்றினார்.

பிரிந்தவர் எல்லோரும் கூடினோம். பேரின்பத்தைப் பேசுதற்குச் சொற்கள் போதா. நான் வந்த மறுநாளே மீனாளும் பனந்தூரிலிருந்து வீடு வந்து சேர்ந்தாள். ஒருவரும் இருவருமாகக் குடித்தனஞ் செய்துகொண்டு வந்த குடும்பத்திலே இப்போது ஐந்து பேர் வாழ்கின்றோம் வற்றாத இன்பத்துடன்! வறண்ட வாழ்க்கை வளமுள்ளதாக மாறியது.

மீனாள், தந்தை, கண்ணுச்சாமி ஆகிய இம்மூவரிடமும் மெல்ல மெல்ல எனது துயர்களையெல்லாம் சொல்லி முடித்துவிட்டு 'ஜெனரல் ஆஸ்பத்திரியில்' நடந்தவற்றையும் விரித்துச் சொன்னேன். கண்ணுச்சாமி தன்னை ஈன்று புறந்தந்த தந்தையை அறிந்து கொண்டு விட்டதால் விள்ளரிய இன்பங்கொண்டான் எனினும் அவரின் பொல்லாத காலப்போக்கினை எண்ணிப் பெரிதும் மனங்கலங்கினான். நோய், மிகுந்த பணச்செலவுடன் குணம் அடையக் கண்ணுச்சாமி ஜெனரல் ஆஸ்பத்திரியில் கால் ஒடிந்து கிடந்த தன் தந்தையைக் கூட்டிக்கொண்டு

வந்து குதூகலம் அடைந்தான். தந்தையையும் தனராசு உள்ளமுடன் வாழ்த்தக்கவெலாஞ் செய்தான்!

இப்போது காட்டிலே எல்லாத் துன்பங்களையும் கடந்து எங்கள் இன்ப வாழ்வுத்தேர் ஓடிக்கொண்டிருக்கிறது. 'வாழ்வாவது இன்பம், வளமுறுவது இன்னாள்' என்பது எங்களின் அசைக்க முடியாத கருத்து!

